
www.padippakam.com



பார்ப்பனியப்
பல்லக்குத்
தூக்கிகளுக்கும்
காவடி
எடுப்போருக்கும்
பாரப்பனியத்தில்
கண்ணிழந்த
பித்தர்களுக்கும்
சமர்ப்பண
தர்ப்பயாமே!

# அரூப் ராம் பிரேமிள்

அறிதுயில்

நினைவுநாள் 11-06-1997

ISSN: 1710-6133

2004 june தொகுதி:1 இதழ்:4

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com




தருமு சிவராம் என்றழைக்கப்பட்ட பிரமிள், 20, ஏப்பிரல்1939 இல் இலங்கையின் திருகோணமலையில் பிறந்து வளர்ந்தவர். எழுபதுகளின் தொடக்க த்திலேயே இந்தியா சென்றுவிட்டார். பிறகு தம் பெரும்பாலான வாழ் நாளைச் சென்னையிலேயே கழித்தார். வேலூர் அருகிலுள்ள கரடிக்குடியில் 11-6-1997இல் மறைந்தார்.

தமது இருபதாவது வயதில், 1959இல் சென்னையிலிருந்து வெளி வந்த **"எழுத்து"** பத்திரிக்கையில் நான் என்ற கவிதையில் இருந்து எழுதத் தொடங்கிய இவர், பிறகு தமிழகத்தி லேயே வாழ்ந்து தம் படைப்புகளை வெளிப்படுத்தியதால், ஒரு தமிழக எழுத்தாளராகவே மதிக்கப்பட்டார். இலங்கை எழுத்து லகமும் இவ்வாறே இவரைக் கணித்து வந்துள்ளது.

நவீன தமிழ் இலக்கியத்தில் பாரதிக்கும், புதுமைபித்தனுக்கும் பிறகு தோன்றிய ஒரு மகத்தான ஆளுமை பிரமிள். புதுக்கவிதை, விமர்சனம், சிறுகதை, நாடகம் போன்றவற்றில் இவரது படைப்பாற்றல் ஒரு உயர்ந்த பட்சத்தை எட்டியிருக்கிறது. ஓவியம், களிமண் சிற்பங்கள் செய்வதிலும் திறமை படைத்தவர் இவரது ஆன்மீக ஈடுபாடு, இலக்கிய ஈடுபாட்டுக்கும் மேலானதாக இருந்து வந்திருக்கிறது. "படிமக் கவிஞர்" என்றும், "ஆன்மீகக் கவிஞர்" என்றும் சிறப்பிக்கப்பட்ட இவரது கவித்துவம், இரண்டாயிரமாண்டுத் தமிழ்க் கவிதை வரலாற்றில், தனித்துயர்ந்து நிற்பதாகும்.

**பிரமிளின் வாழ்நாளில் வெளியான நூல்கள்:-**

தொடக்கத்தில் எழுத்து"வும் இடையில் "கொல்லிப்பாவை"யும் இறுதியில்

**கண்ணாடியுள்ளிருந்து** - கவிதை தொகுப்பு

**கைப்பிடியளவு கடல்** - கவிதை தொகுப்பு

**மேல் நோக்கிய பயணம்** - கவிதை தொகுப்பு

**லங்காபுரி ராஜா** - கதைத் தொகுதி

**ஆயி** - குறுநாவல்

**ஸ்ரீலங்காவின் தேசியத்தற்கொலை** - சமூகவியல்

படிப்பகம்

www.padippakam.com

| | |
|---|---|
| **விமர்சன ஊழல்கள்** | - விமர்சனம் |
| **விமர்சனாஸ்ரமம்** | - விமர்சனம் |
| **விமர்சன மீட்சிகள்** | - விமர்சனம் |
| **படிமம்** | - தொகுப்பாசிரியர் |
| **தமிழின் நவீனத்துவம்** | - தேர்ந்தெடுக்கப் பட்ட "எழுத்து" கட்டுரைகள் |
| **நசஷத்திரவாசி** | - நாடகங்கள் தொகுப்பு |
| சாது அப்பாதுரையின் **தியானதாரா** | - சாதுவின் வாழ்வும் வாக்கும் |
| **பரமிள் கவிதைகள்** | - அனைத்துக் கவிதைக ளின் தொகுப்பு |

"லயம்" பத்திரிக்கையும் இவருக்குக் களம் அமைத்து தந்தன.
1993இல் "மீறல்-4" இதழி பிரேமிள் குறித்த கட்டுரைகளும் அவரது சில படைப்புக்களையும் தொகுத்து வெளியிட்ட சிறப்பிதழ் வந்துள்ளது.

இவரது படைப்புக்கள் பற்றிப் பலரும் பலவாறு கூறியுள்ளபோதும் பிரேமிள் இருக்கும் கடைசிக் காலத்தில் வெளிவந்த மேற்சொன்ன சிறப்பிதழுக்குப் பல "ஜாம்பவான்கள்" பதில் ஏதும் எழுதவில்லை. தற்போது கனடாத்த தமிழருக்கு அறிமுகமான சாமியார், தான் அந்தக்குறிப்பிட்ட காலத்தில் ஏதும் எழுதுவதில்லை என்று சொல்லிப் பதில் தந்துவிட்டு, இந்தியாடுடேவில் கட்டுரை எழுதிய ஆச்சார்யமாச்சார்யங்களும் உண்டு.

தற்போது பிரமிள் கவிதைகள் தொகுப்பு லயம் வெளியீடாக வந்துள்ளது. மீதமுள்ள அனைத்தையும் தொகுப்பாக்கும் எண்ணம் இருப்பதாகக் குறிப்பிடடிருக்கின்றார்கள். ஆனால் கனடாவில் எழுதுவதற்கு மட்டுமல்லாமல் (புத்தகங்களை வாங்குவதற்குக்கூட) வாசிப்பதற்குக்கூட சாமியார்களின் தணிக்கைகளைத் தாண்டித்தான் வாய்ப்புக்கிடைப்பதால் கனடிய வாசகர்களுக்கு இவை வந்து சேராது என்பது திண்ணம்.

பிரமிளைப் படிமக் கவிஞர் என்று பொதுவாகச் சொல்வார்கள். ஆனால் அவரது கவிதைகளில் ஒரு "மெட்டா∴பிசிக்கல்" தன்மை இருப்பதை வாசகர்கள் எளிதாக உணர முடியும். ஆங்காங்கே கிடைக்கும் பிரேமிள் பற்றிய தேரந்தெடுக்கப்பட்ட குறிப்புக்கள் பார்வைகள் பலரின் வயிற்றில் புளியைக் கரைக்கும், கரைக்கவேண்டும் என்பதே எமது விருப்பம்.



படிப்பகம்

www.padippakam.com

# என்றேன், என்கிறார்

இந்தக் கவிதை-விமரசனம் முடிந்து போன காலத்துக்கானதல்ல. இன்னும் வாழும் பலரும் தாங்கள் எழுதும் பல குப்கைளையும் கவிதைகள் என்று உலகத்தோர் தலையில் கட்டியடிக்கும் சோகம் நிகழும் காலத்தில், இவர்கள் எல்லாரின் கவிதைகளுக்கும் இது சாலப் பொருத்தமான விமர்சனமே. "கவிதை என்றால் என்ன? எப்போது ஒரு துண்டறிக்கை கவிதையாகிறது" என்ற கேள்விகளை இன்றைய கவிஞர்களைக் கேட்டுப்பாருங்கள்... கன்னா பின்னாவென்று உளறுவார்கள். நாங்களும் எதோ விதியென்று இவர்களையெல்லாம் கட்டி மாரடிக்கின்றோம். மனச்சாட்சிப்படி இன்றைய 'கவிஞர்களின்' எத்தனை கவிதைகள் கவிதையென்று யாரேனும் 'உண்மையாகச் சொல்லிவிடமுடியுமா? இருக்கும் கருத்துச் சுதந்திரத் தவிப்பிற்குள் இவர்களை ஏன் போட்டுக் குடைவான் என்றவகையில் பேசாமல் இருக்க வேணடியிருக்கும் நிலை. பொதுக்கருத்துக்கான சுததந்திர மறுப்பு கலை வடிவங்களின் தரத்தையும் பாதிக்கிறது என்பதே உண்மை. அதுவே அக/நட்பு முரண்களாகக்கூட விமர்சனமாக வைத்துப்பாரக்க விடாமல் தடுக்கிறது.

படைப்பு ஒரு பயங்கரப்
பொறுப்பு என்றேன்
கவிதை ஒரு அறிவார்த்தத்
திகைப்பு என்றேன்
உள்ளதை உள்ளத்தில்
வாங்கி உயிரூட்டும்
சுக்கிரத் தவிப்பு
உம்மிடம் இல்லை. :
உள்ளதுக்கு அப்பால்
ஆழ்ந்து எரியும்
சூரியத் தகிப்பு
அதுவும் இல்லை
உமக்கேன் இந்த வேலை?
உமது பிரைவேட்
புட்டிக் குடியையும்
குட்டி அடியையும்
அவுத்து அவுத்துக்
காட்டி விட்டால்
கவிதை ஆகுமா?
பிரக்ஞை விஷயம்
பிரைவேட் அல்ல
தனியன் அனுபவம்
மனிதன் ஆகணும்
ஆகலை என்றால்
அறிவின் எதிரில் அது
ஐயோ பாவம்,
படிக்கும் மனசுக்குள்
நிகழும் விபத்து
கால் ஒடிந்த நாற்
காலியில் உட்
கார மாட்டீர் நீர்
மனிதத் தவத்துக்கு
மானக் கேடான
உமது கவிதையில்
அமராது என்மூளை
என்றேன் அவர் சொன்னார்
"எனக்கேது சூரிய ரேகை
எனக்கேது ஏதோ
சுக்கிர யோகம் என்று
சோசியம் பாரக்கிறீர்
நானாக்கள் சூனாக்கள்
ஞாவன்னா ராவன்னா
யாரைத்தான் வேணாலும்
கேட்டுப் பாருமேன்
அவர்கள் அறிஞர்கள்
உமக்கேது அறிவு?
அறிந்தவர் என்றால்
கேட்கிறேன் சொல்லும்
கேள்விக்கு விடையை"
என்ற அவர்
குலுக்கும் நடிகைகள்
கும்மிருட்டு மோகினிகள்
சிலுக்கு மாமிகள்
சிலரைக் குறிப்பிட்டு
"இவர்களின் உறுப்புக்களில்
சிவப்பெது கறுப்பெது?
சொல்லும்" என்கின்றார்
என்கின்ற போதே
வழியுது அவருக்கு
ஜொள்ளும் ஸ்கலிதமும். ◘

www.padippakam.com

# பிரேமிள்

## பேட்டி கண்டவர்: காலப்ரதீப் சுப்ரமணியன்

**காலப்ரதீப் சுப்ரமணியன்:** அசம்பிரதாயமான ஒரு கேள்வியுடன் ஆரம்பிக கலாமா? உங்கள் எழுத்தியக்கத்தின் ரிஷீ மூலங்கள் எவை?

**பிரேமிள்:** நதி மூலம் ரிஷிமூலம் கேட்கக்கூடாது என்பார்கள். ஏனென்றால் அவை ரொம்பவும் எளிமையாக இருந்து விடலாம். பிரம்மாண்டமான கங்கையின் நதிமூலமான கங்கோத்ரியில் ஒரு சொட்டு நீர்தான் அவ்வப்போது ஜனிக் கிறது. இதை ஞாபகத்தில் வைத்து என் பதிலைப் பார்க்க வேண்டும். என் தாயாரின் மூதாதை களிடையே ஆசுக விகள் இருந்திருக்கின்றனர். தாயார்கூட எழுதப் படிக்கத் தெரிந்திருக்கா விட்டாலும் நுட்பமான ரசனையும் கவியு ணர்வும் கொண்டவர். அவர் பேசும் போதும் சரி சண்டையிடும் போதும் சரி, சில வேளைகளில் அவர் சொல்கிறவை அசாதாரணமாக இருக்கும். இயற்கை, செடிகள், பிராணிகள் மீது அவருக்கிரு ந்த வாஞ்சைகூட ஒரு கவியுள்ளத் தினைத்தான் காட்டுகிறது. கடுமையான வறுமை, என் ஐந்து வயதிலிருந்து அவ்வப்போது தகப்பனாரால் கைவிடப் பட்டநிலை, அயலகத்துப் பூசகர்களின் நிலப் பறிப்புகள், நாளாந்த வன்முறை களுக்கு இலக்குக்கும் சூழல் இவை யாவற்றினூடேயும் என் தாயாரின் இந்த ஆழ்ந்த குணாதிசயங்கள் என்னைச் சூழ்ந்து நீடித்திருக்கின்றன. தகப்பனார் கோணத்திலிருந்து இத்தைகைய ஆழங் கள் எதுவும் கிடைத்ததில்லை. அவரால் மிகவும் வருத்தப்பட்ட என் தாயின் நிராதரவுதான் என் உணர்வுலகத்தினை நெய்திருக்கிறது என்றும், நிராதராவாக நிற்கும் சீரிய மதிப்பீடுகளைப் பாதுகா க்க முனையும் என் எழுத்தியக்கத்துக்கு இது ஒரு மனோதத்துவ ரிஷீமூலம் ஆகலாம் என்றும் தோன்றுகிறது.

**கா.சு:** மிகவும் ஆழமும் கருத்து ச்செறிவும் கொண்ட கவிதைகளை எழுதியி ருக்கிறீர்கள். நீங்கள் கவிதை எழுதும்படி தூண்டிய ஆரம்ப உந்துதல்கள் எவை?

**பிரேமிள்:** உயர்நிலைப்பள்ளியில் எனக்கு வயது சுமார் பதினைந்து இருக் கும்போது, தமிழ் ஆசிரியர் பெ.பொ.சிவசேகரம் எங்கள் கிளாஸிற்கு விசித்திரமான ஹோம் ஓர்க் ஒன்று கொடுத்தார். அப்போது பிரபலமாக இருந்த குழந்தைக் கவிஞர் அழ வள்ளியப்பா எழுதிய பூந்தோட்டம் என்ற கவிதையைப் படித்து ரசித்துக் காட்டினார். ( பெ.பொ.சிவசேகரம் -திருக் கோண மலைக்கவிராயர்- என்ற பெயரி ல் கவிதைகள் எழுதியவர் என்பதை இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும். மரபு மாடலில்தான்). பூந்தோட்டம் - குழந் தைகளுக்கான மரபு மாடல். இதேபோல் எங்கள் ராமகிருஷ்ண மிஷன் ஸ்கூலுக்கு எதிரில் இருந்த பெரிய மைதானத்தைப் பற்றி ஒவ்வொருவரும் கவிதைகள் எழுதிவர வேண்டும் என்பது ஹோம் ஓர்க். இதை நான் எளிதாக நிறைவேற்றியதுடன் ஒரு வரியும் எழுதவராமல் தவித்த வேறுசில நண்ப ர்களுக்கும் தனியாக எழுதித் தந்து தங்கள் கவிதைகளாக ஆசிரியரிடம் தரும்படி கொடுத்திருக் கிறேன். (இவர்களுள் இப்போது **சி.சிவசேகரம்** என்ற பெயரில் நீங்கள் காணக்கூடிய அன்பர் அடங்கவில்லை.- அதே கிளாஸில் அவர் இருந்தார் எனினும்) விளையாட்டு மைதானம் என்ற இந்த கவிதைதான் முதன் முதலில் நான் எழுதியது. அதுவரை இயற்கை யாகவே ஓவியத்திறன் கொண்டவன் நான் என்ப துதான் கணிப்பு. இந்தக் கவிதையுடன் என் புதிய திறன் ஒன்றை நானே கண்டு பிடித்திருக்கிறேன். கவிதை யின் எதுகை மோனைச் சொற்களை முதலே தீர்மானித்துவிட்டு இட்டு நிரப்பும் நண்பர்



படிப்பகம்

www.padippakam.com

ஒருவரும் கிளாஸில் இருந்தார். அவருக்கு நான் எழுதும் இயல்பான முறை வராததால் என்னை ஒரு விசித்தி ரப்பிறவ-ியாக எடுத்துக் கொள்வார். ஹோம் ஓர்க்கை படித்த பெ.பொ.சிவசேகரம் தமது கிளாஸில் குட்டி பூதங்கள் நிரம்பியிருப்பதாக கிளாஸிலேயே சொன்னபோது என்னிடம் கவிதை வாங்கி ஹோம் ஓர்க் பண்ணிணவர்கள் என்ன நினைத்தா ர்களோ. அவர்களுக்கு தலை-வலி தீர்ந்தது- எனக்கு பிரசவ வேதனைகள் ஆரம்தபித்தன- எனலாம். நாலைந்து வருஷங்களுக்குள் எழுத்து வில் 1960ல் என் கட்டுரை வந்தபோது என்சீனியர் மாணவர்கள் அதை நான் எழுதியிருக் கமுடியாது என்று பெ.பொ. சிவசேகரத்திடம் கூறியதும், அவர் அதை மறுத்து, எந்தப் புற்றில் எந்த பாம்பு இருக்கோ? என்றதும் என் காதுக்கு வந்திருக்கின்றன. இந்த ஆரம்பம் எனது கவிதையின் வடிவம் சம்பந்தப்பட்ட மட்டுக்குத்தான். அனுபவ த்தின் ஆழமும் வாழ்வைப் பற்றிய விசாரணைகளுமாக என் கவிதைகள் பொருள் ரீதியான மலர்ச்சி பெற மேலும் ஐந்து ஆண்டுகள் ஆயின. அதுவரை என் ஆரம்பகால எழுத்துக்களில் மரபின் பிரதிபலிப்புகள்தான் அதிகம். இருந்தும் அதில் கூட ஒருவித புதுமைத்தொனி இருந்திருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக அந்தக் காலகட்டத்துக் கவிதைகளை நான் பாதுகாக்கவில்லை.

**கா.சு:** உங்களுடைய படைப்பு மனோ நிலை பற்றி கூறமுடியுமா? படைக்கும் போது உங்கள் மனநிலை என்ன?

**பிரேமிள்:** படைக்கும் போது ஒரு ஒழுங்கமைப்பை நிறைவேற்றும் நோக்க ம்தான் என்னால் உணரக்கூடிய என் மனோநிலை. கூடவே சிரு'டிகரமான, ஆழ்ந்த கருத்துக்கள் தோன்றும் நிலை. இதுதான் படைப்பியக்கத்தின் முக்கிய மான களம். ஆனால் இப்படி கருத்துக்கள் பளீரெனப் பிறக்கும்போத என் மனோநிலை என் அவதாகத்துக்கு உடபடுவதில்லை. மீண்டும், இவ்விதம் கோன்றுகிள கரத்துக்களை ஒரு ஒருமைப்பாட்டுக்குள் ஒழுங்கதைக்கும் .யக்கமாக மனம் செயல்படும். இதெல் லாம் திருப்திகரமாக நிவைவேறிவிட் டால், முடிவாக ஒருவிதமான சுதந்திர உணர்வு பிறக்கிறது.

**கா.சு:** எழுத்து மூலம் உண்மையை அடைதல் என்பது பற்றி உங்கள் பார்வை என்ன?

**பிரேமிள்:** உண்மையை அடைவதற்கு ஒரே வழி மௌனம் தான். எல்லா மார்க்கங்களும் அகந்தையின் பரிபூர்ண மான அடக்கத்தை-ஒடுக்கத்தைத்தான் இந்த மௌனத்துக்கு முக்கியமான ஆதாரமாக்குகின்றன. மௌனத்தை இந்திய தியான முறைகள் வெளிப்ப டையாக வலியுறுத்தலாம். சிறித்துவ தியானமுறை மௌனம் பற்றி ஒன்றும் குறிப்பிடாதிருக்கலாம். ஆனால் அகந் தையின் ஒடுக்கம் பற்றி எல்லா மார்க்கங்களும் ஒருமித்த பார்வையை வெளிப்படுத்துகின்றனசரி, எழுதுவது இந்த அகந்தையின் ஒடுக்கத்தைச் சாதித்துவிடுமா? ஒண்ணரைக் கவிதையை எழுதி அதை அச்சில் வரப் பார்த்துவிட்ட கவிஞர்களுக்கு அகந்தை எகிறிக் குதிப்பதுதான் தெரிகிறது. பெரிய கவிஞர்களையோ எழுத்தா ளர்களையோ எடுத்துக் கொண்டால், அவர்களிடமும் பலரிடத்தில் அகந்தை நாசூக்காகக் கொலு வீற்றிருக்கக் காணலாம். எனவே கவிதை மூலம், எழுத்து மூலம் உண்மையை அடைதல் என்பது எனக்கு அபத்தமான கூற்றா கவே தோன்றுகிறது. ஆனால் எழுதும் போது, நேர்மையையும், மன ஓர்மையும் உள்ள ஒருவன் தனது எழுத்தின் மூலம் வெளிப்படுத்து கிறவற்றை - அதாவது தன்னை - அவதானிக்க சீராக்கும் வேலைக்குக் கூட எழுதுதல் ஒரு சாத னமாகும்..: (ஒவ்வொருவரும் காலையில் சில பக்கங்கள் எதையாவது எழுதி வருவது அன்றாட மனோ வாழ்வைத் தெளிவு படுத்த உதவும்). இருந்தும் உண்மைத் தேட்டத்தைப் பொறுத் தவரை இது

www.padippakam.com

எல்லாம் வெறும் அ, ஆ, தான்: மிக மேலோட்டமான பயிற்சிதான்.

**கா.சு:** படிப்பதன் மூலம் வாழ்க் கையைப் புரிந்து கொள்ள முடியுமா? உண்மையை அறிய படிப்பதும் பிறர் உரையைக் கேட்பதும் உதவுமா?

**பிரேமிள்:** கிருஷ்ண மூர்த்தியிடம் -உங்கள் உடல் மறைந்தபிறகு உங்கள் பிரக்ஞை என்னவாகும் என்று கேட்ட போது அது அப்படியே போய்விடும் ஆனால் நீங்கள் நான் சொன்னவற்றுடன் தொடர்பு கொண்டிருந்தால், ஒரு வேளை நீங்கள் அந்தப் பிரக்ஞையுடன் தொடர்பு கொண்டிருக்கலாம், என்று சொன்ன தாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது மிகப் பிரச்சனைக்குரிய நுடபமான வி'யம். வெறுமனே இன்டலக்சுவல் லெவலில் மட்டும் தீர்மானித்து முடிவு கட்ட முடியாதது. Teachingஎன்றது, ஒரு Level of understanding என்று நினைக்கிறேன். நீங்கள் இந்தப் பிரக்ஞையுடன் தொடர்பு கொள்ளலாம் என்றே சொல்கிறார். அந்தப் பிரக்ஞை, ஜே.கே. என்ற மனிதரினுள் இருந்த பர்ஸனலான பிரக்ஞையா என்பது அடுத்த கேள்வி. நிச்சயமாக அப்படி யென்றால் அதற்கு அர்த்தமே கிடையாது. எனவே, அது எல்லோருக் குள்ளும் இருக்கிற ஒரு அகண்டமான பிரக்ஞையாக இருக்கவேண்டும். அப்படி யானால், ஜே.கே.யின் Teaching மூலம் மட்டும்தான் அதனுடன் தொடர்பு கொள்ள முடியுமா என்பது அடுத்த கேள்வியாகிறது. அதன் மூலம் மட்டுமே முடியும் என்பது அர்த்தமற்ற ஒன்றாகும். ஆகவே Teaching vd;gij tpl understanding என்பதைத்தான் அவர் அர்த்தப்படுத்தியிருக்க வேண்டும். புரிதல் என்பது நமக்குள் ஏற்பட வேண்டிய ஒரு பிரக்ஞைநிலை. இது கூட இருக்கிற இன்னும் ஆழ்ந்த உரு பிரக்ஞைநிலைக்கு நம்மை இழுத்துச் செல்லும். இம்மாதிரி விசாரணைகளில் ஈடுபட்டால்தான், இந்த மாதிரிப் பிரச்சனைகள் துலக்கம் பெறும். உங்கள் வார்த்தைகளை எடுத்துப் பதில் சொல்வதென்றால் படிப்பு என்பது புத்தகப் படிப்பு மட்டுமா என்பதை ஆராயவேண்டும். அனுபவமும் படிப் புதான். வாழ்க்கை என்பது எதிர்பாராத தன்மைகளைக் கொண்டது. எனவே அதிர்பார்ப்புகள் அற்ற உள்ளமே வாழ்வுடன் தொடர்பு கொள்ள லாயக் கானது எனலாமா?

**கா.சு:** பூசகர்களின் நிலப்பறிப்பு உங்கள் ஆரம்பகால விமர்சனங்களைத் தீர்மானிக்கவில்லை. பிரமணர்களாக தங்களைக் கணிப்பவர்களைப்பற்றி அப்போது எழுத்து (1959-1971)வில் நிறைய பார்ராட்டுதலாக விமர்சித் திருக்கிறீர்கள் இதன் பின்னணியை விரி வாகச் சொல்லுங்கள்.

**பிரேமிள்:** என் தாயாருக்கு இரண்டு தங்கைகள். பெற்றோரை இழந்த மூன்று பெண்களும் மூன்று திசைகளில் சுவீகரிக்கப்பட்டார்கள். முதல் கங்கை கொழும்புவில் ஒரு பெரிய பணக்கார உறவினரால் அங்கே தாம் வேலைக் காரி போல் நடத்தப்பட்டதைச் சகிக்க முடியாமல் வளர்ந்த இவர், பெரிய வரானதும் அங்கே பியூனாக இருந்த சார்ளிஸ் உடவத்த என்ற சிங்களவரை காதல் திருமணம் புரிந்து வீட்டைவிட்டு ரகசியமாக வெளியேறி, ஒரு சிங்களத் தியாகவே மாறினார். சார்ளிஸ் உடவத்த என்ற பெயரை என் லங்காபுரி ராஜாவில் நான் உபயோகித்திருக் கிறேன். ஆனால் உண்மையான உடவத்தைக்கும் என் கதையில் வரும் உடவத்தைக்கும் இடையில் பாத்திர வேறுபாடு உண்டு. ஞகானாம்பிகையாகப் பிறந்து ஞானவதியாக மாறிய என் சின்னம்மா, அவரது ஐந்து குழந்தைகள், தகப்பனார் உடவத்த யாவரிடமும் தமிழன் கெட்டவன் என்ற சிங்கள இனவாதப் பார்வை இருப்பதை உணர்ந் திருக்கிறேன். நான் எழுத்துவில் எழுதுமளவு முதிர்ந்த பருவத்தில் இவர்களைத்தேடிக் கண்டுபிடித்துப் பழகியபோது என்னை விதிவிலக்கான நல்ல தமிழன் என்றும் ஆகவே சிங்கள வனாகுவதற்குத்



படிப்பகம்

தகுதியானவன் என்றும் அவர்க்ள முடிவுகட்டியது கூட உண்டு. இதை நான் உணர்ந்த பிறகு தொடர்பு வழிட்டுப் போய்விட்டது. ஏனெனில், உணர்வின் அடிப்படையில் நான் வெறும் மனிதன் ம:ட்டுமே. இதற்கு முன்பே, அதாவது எழுத்துவில் எழுதுமுன்பே 1957 வாக்கில் நான் தேடிக் கண்டு பிடித்தது ஆச்சிமுத்து என்ற என் தாயாரின் கடைசித் தங்கையின் குடும்பத்தை. (என் தாயாரின் பெயர் அன்னலட்சுமி. மூவருள் முதலாமவர்.) என் தாயார் தமது 29வது வயதில் ஒரே மகனான என்னைப் பெற்றார் என்றால் இந்த கடைசித்தங்கை தமது 15 அல்லது 16 வயதில் ஒரே மகனான என் ஒன்றுவிட்ட எண்ணன் தம்பிராஜாவைப் பெற்று விதவையாகி மகனுடன் சிதம்பரத்தில் வாழ்ந்து வந்தார். தம்பி ராஜா தமிழை முறையாகக் கற்ற சைவ சித்தாந்தப் புலவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளர்களுள் ஒருவருமாக இருக்கும்போது இந்தத் தொடர்பு ஏற்பட்டது. இதற்கும் மேல் இவர், மறைமலை அடிகளின் பக்தரும் தனித் தமிழ்வாதியும் தீவிர பிராமண எதிர்ப்பா ளரும்கூட. ஏற்கனவே எனக்கிருந்த பழந்தமிழறிவுக்கு இவருடைய தொடர்பு ஊடாட்டம் தந்தாலும் இவருடைய பிராமண எதிப்பபை என்னால் புரிந்து கொள்ள முடிந்ததில்லை. பின்னாடி நான் எழுத்துவில் எழுதிய கட்டுரைகளில் அவர் தமது வகுப்பாகக் கருதிய தமிழ்ப் பண்டிதர்களின் பார்வைகளை நிராகரி த்த என் பார்வை அவருக்கு என் மீது விரோத பாவத்தை ஏற்படுத்திவிட்டது. பின்பு நான் சிதம்பரத்தில் மௌனியுடன் பழகுவதைக்கண்டு **நீ ரொம்பவும் தான் பிராமணர்களுடன் பழகுகி றாய். மிகவும் ஜாக்கிரதையாக அவர்களுடன் பழகு. மற்றவர் களைத் தங்கள் தேவைக்காகப் பயன்படுத்திவிட்டு, பிறகு குப்பை க்கூடையில் போடுவதுதான் அவர் களுடைய முறை. நீ சின்னவன், போகப்போகத் தெரிந்து கொள் வாய். என்று நீண்ட உபதேசம் செய்தார். எனக்கு இது வேப்பங் காயாகத்தான் கசந்தது. இயற் கையாகவே என் மனம் மனிதப் பிரி-வினையின் எல்லைகளை மீறி இருந்தமைதான் இதன் காரணம். எங்கள் குடும்பத்தை ஓரளவுக்கு பொருளாதார ரீதியில் பூசகர்கள் நிர்மூலமாக்கியும்கூட அவர்க ளைத் தனிமனிதர்களாகத்தான் நான் கணித்திருக்கிறேன்.** என்பா ர்வை எப்போதுமே ஒரு தனி மனிதனை அவனது வகுப்புடன் ஈடுபடுத்தாமல் அவனது பேச்சுக்கும் செயலுக்கும் அவனையே பொறுப்பாகக் கொள்ளும் பார்வை ஆகும். அவன் திறனாளி என்றிருந்தாலும் இது பொருந்தும். எனவே எழுத்துவில் நான் எந்த பிராமண வகுப்பினரையும பாராட்டி விமர்சிக்கவில்லை. மேலே குறிப்பிட்ட என் மனப்பின்னணியில் இந்த வேலை க்கு இடமில்லை. தனித்தனி எழுத்தாள ர்களைத்தான் விமர்சித்தேன். இது பற்றி அப்போதும் சரி இப்போதும் சரி ஒரே பர்வைதான்.

காா.சு: இருந்தும் 1970க்களில் ஆரம்பித்து உங்கள் எழுத்தினால் தங்களைப் பிராமண வகுப்பினர் என்று கருதும் எழுத்தாளர்கள் பாதகமாக விமர்சிக்கப்பட்டிருக்கிறார்கள் அல்லவா? இதன் அடிப்படையில் **உங்களை அவர் கள் பிராமண எதிர்ப்பாளர் என்கிறார் களே?**

பிரேமிள்: *தங்களை மனித வர்க்கத்திலிருந்து பிரித்து உயர வைத்துக் கொள்வதற்காக ஒரு வகுப ்பில் ஒரு கட்சியில் ஒரு வர்க்கத்தில் தங்களைத் தாங்களே பிரக்ஞாபூர்வமாக ஈடுபடுத்திக்கொள்கிறவர்கள்? தங்கள் மனித தனித்துவத்தைக் குழு மனோபாவத்துக்காக பலியிட்டு விட்ட வர்கள். இதனை விபரபூர்வமாகவும் குறிப்பிட்ட எழுத்தாளர்களின் எழுத்து க்களில் அடையாளம் காட்டியும் எழுத் துக்கு அப்பால் அவர்கள் கொண்டிருந்த மனோபாவங்களை நேர்ப்பழக்கத்தில் அறிந்ததை, முன்வைத்தும் எழுதியிருக் கிறேன். இதனை நான் செய்திருப்பது, எழுத முற்பட்டபோது, எழுத்துக் களத்தில் இயங்கிய ஒரு கௌரவ த்தன்மையை*

www.padippakam.com

*வேண்டுமென்றே துறந்தி ருக்கிறேன்.*

**கா.சு:** முந்திய கேள்வியையே வேறுவிதமாக மீண்டும் கேட்கிறேன் படைப்பையும் படைப்பாளியையும் வித்யாசப்படுத்துகறீர்கள், ஆனால் படைப்பாளியாகிய தனிமனிதனிடம் உள்ள குறைபாடுகளை -குறிப்பாக மௌனி போன்றவர்களிடம உள்ள ஜாதீயக் குறைபாடுகளை சுட்டிக் காட்டுகிறீர்கள். இதன் தேவை என்ன? கொஞ்சம் விரிவாகவே விளக்குங்கள்.

**பிரேமிள்:** ஜாதீயம், மிகச்சிறந்த எழுத்தாளர் என்ற தகுதியைப் பெற்றுள்ளவர்களிடம் செயல்படுகிறபோது அது அவர்களது அத்திவரத்தை குழுரீதியான tribal mentality ஆக்குகிறது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன். எனக்கு அவர்களை நேர்முகமாகத் தெரியும் என்பதுதான் இதற்கு ஆதாரமே தவிர அவர்களது எழுத்தை விமர்சிப்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. அதாவது இதை வைத்து அவர்கள் எழுத்தைப் பார்க்கமுடியாது. மௌனி சம்பந்தமாக நான் ஒரு சித்தாந்தத்தை உருவாக்கி யிருக்கிறேன். அது இன்றுவரை பலருடைய விஷயத்திலும் சரியென்றே எனக்குத் தோன்றுகிறது. அதாவது, இனக்குழுவாதப் பார்வை (tribal mentality) உள்ள ஒருவர் எவ்வளவு பெரிய திறனாளியாக இருந்தாலும் போகப்போக அந்தத்திறனை இந்த இனக்குழுப் பார்வையை வெளிப்படுத்து வதுதான் கலை என்கிற பேத்தல்கூட உண்டு. அந்த அளவுக்கு இவ்வினக் குழுப்பார்வை இங்கே கலைத்துறையில் செயல்படுகிறது. அப்படி அது செயல்படக்கூடாது, கலையே அதனால் பாழ்பட்டுவிடும், அத்தகைய சூழ்நிலையில் கலைஞன் என்ற பகுதி வளர்ச்சி பெறாது. இந்த இனக்குழுப் பார்வை ( இதை ஜாதீயப் பார்வை என்று கூடச் சொல்லலாம், ஆனால இக்குழுப் பார்வை என்று சொல்வதுதான் விஞ்ஞான பூர்வமான முறையாகும்) கலை சம்பந்தப்பட்ட யுனிவர்சலான பார்வையை மழுப்பி விடும், கலாரீதியான உணர்வு என்பது, எல்லாவிதமான மனத் தடைகளையும சமூகரீதியான தடுப்புக் களையும் வேலிகளையும், தேசங்கள் மொழிகள் சம்பந்தமான எல்லைகளையும், நம்பிக்கைகளையும் தாண்டி, மனிதனை மனிதன் தொற்றக்கூடிய தன்மையுள்ள ஒரு வீர்யம், இதை இனக்குழுப்பார்வை மழுங்கடிக்கிறது. இதுதான் என்னுடைய பார்வையின் அத்திவாரம. இந்தப் பார்வைக்கு செயல்பாட்டு ரீதியான ஆதாரங்கள், என்னுடைய அனுபவத்தில் எவ்விதம் இருக்கின்றன என்பதை வெளிப்படுத்துவதற்குத்தான் இத்தகையவர்களைப் பற்றி நான் எழுத வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவர்களைப பற்றி நேரில் தெரிந்த விஷங்களை முன் வைக்க வேண்டி வருகிறது. இது துரதிஷ்ட கரமான வி'யம். ஏனெனில் எனக்கு இன்றைக்கும் அவர்களைப் பற்றிய ஞாபகங்கள் பலவிதத்திலும் மிக இனிமையானவை. என்றாலும் இந்த வி'யத்தைச் செய்தே ஆக வேண்டிய கடமையின் அடிப்படையில்தான் செய்கி றேன். இதில் எவ் விதமான பர்ஸனல் நோக்கமும்கிடையாது. மேலும், கலை மற்றும் பிற எழுத்தாளர்கள் சம்பந்த மான அடிப்படைச் சித்தாந்தங்களில் அபிப்ராயங்களில் எனக்கும் மௌனிக் கும் ஒரு வேறுபாடும் கிடையாது. ஒரு அடிப் படையை எடுத்துக்கொள்வோம் ஒரு கலைப்படைப்புக்கு objective ஆன ஒரு beauty இருக்கிறது. அந்த அழகை உணர்ந்து அனுபவிப்பது வாசகனுடைய கடமை என்பது மௌனியின் கொள்கை. இதுவேதான் என்னுடைய கொள்கையும். இது என்னுடைய விமர்சனங்களில் கண்டு சிலாகித்தவர் மௌனி. என் விமர்சனங் களுக்கு அடியில் இப்படி ஒரு சித்தாந்தம் உள்ளதை உணர்ந்து இந்த அளவுக்கு என்னை வாசித்தவர்கள் என்று நான் வேறு யாரைச் சொல்வது? யேசுதாசனைச் சொல்லலாம். ஒரு கலைப் படைப்புக்கு தன்னளவில் அழகு ரீதியாகவோ முழுமை ரீதியாகவோ ஒரு தன்னிலை உண்டு. IT exists by Itself. இந்த objectivi-



படிப்பகம்

www.padippakam.com

tyயை வாசகன் உணர வேண்டும். இது வாசகனிடமிருந்து கலைப்படைப்பு எதிர்பார்க்கிற கடமை. இதை வலியுறுத்துவதுதான் என்னுடைய விமர்சனம். இதை அறிந்துகொண்ட **மௌனி** உண்மையில் செல்லப்பா, ***வெங்கட் சாமிநாதன்*** போன்றவர் களிடமிருந்து வேறுபட்ட நிலையில்தான் இதை அநுசரிக்கிறார். என்னுடைய பார்வையும் அவருடைய பார்வையும் ஒன்றாகிறது. இது ரொம்பப் பேருக்கு புரியாத, தெரியக்கூட வராத விஷயம். **க.நா.சு., வெ.சா, நகுலன்** போன்றோர் இந்த அளவுக்குப் போய் என் கட்டுரைகளைப் படித்திருக் கிறார்களா அல்லது ஒரு கலைப் படைப்பை அணுகி யிருக்கிறார்களா என்பதே கேள்விக்குரியது. அவர்களுக்கு இது எட்டியதே கிடையாது. ஆக, மிக அடிப்படையான விஷயங்களில் மௌனிக்கும எனக்கும் எந்தவிதமான வேறுபாடும் கிடையாது. ஆனால் அவருடைய இனக்குழுப் பார்வையின் மூர்க்கம்தான் - அந்த ஒரே ஒரு விஷயம்தான் - அவருக்கும் எனக்கும் உள்ள வேறுபாடு. இந்த வேறுபாடு என்னைப் பொறுத்தவரை மிக முக்கியமானது, ஏனெனில், அவரையே தொடந்து ஒரு கலைஞனாக இயங்கவிடாமல் வெறும் இனக்குழு வாதியாகவே தேய வைத்தது அவருடைய அந்தப் பார்வை என்பது அதுதான் என் குற்றச்சாட்டின் மிக முக்கியமான அங்கம். இதே வி'யம் தொடந்து மற்ற so called கலைஞர் களிடம்கூடச் செயற்பட்டிருக்கிறது. முத்துசாமி தொடந்து ஒரு எழுத்தியலாளராக மலராததற்குக் காரணம் அவரிடம் இதே இனக்குழுப் பார்வை ஏதோ ஒருவகையில் செயல் பட்டதுதான். இதை நான் அங்கங்கே மிகச் சுற்றி வளைத்துச் சொல்லியிருந்தாலும், அவர் கலைஞராக, எழுத்தியலாளராக வளரக்கூடிய சக்திகள் இருந்தும் அவை மலர்ச்சி பெறாமல் போனதற்கு, என்னால் வேறு காரணங்களைக் காணமுடியவில்லை. இதே விஷயத்தை சுந்தர ராமசாமிக்கும் பொருத்திப்பார்க்க வேண்டியிருக்கிறது. அவர் வளர்ந்து வரக்கூடிய நிலையில் திடீரென்று ஜே.ஜே சில குறிப்புகளை எழுதியதன் மூலம் தன்னை ஒரு இனக் குழுவாதியாகத்தான் மிகவும் தந்திரமான விதத்தில் வெளிப்படுத்திக்கொண்டார். அதை எவ்வளவு தந்திரமாக அவர் செய்தாலும் அது எனக்கு வெளிப்படையாகத் தென்பட்டது என்ற அளவில் அதை நான் பகிரங்கப் படுத்தியிருக்கிறேன். இதை அதுவரை வேறு யாருமே செய்யவில்லை என்பதையும் காணலாம். இதற்கு அப்புறம் அவர் எழுதிய எதிலும் , அவர் எழுத்தின் இயற்கையான - குறிப்பிட்ட வகைப் பரிகாசத்தொனி, தனித்துவமான சித்து வேலைப்பாடு- இவை எதுவுமே இல்லை என்பதைக் காணலாம். காலச் சுவட்டில் அவர் எழுதியது அவர் செய்த மொழிபெயர்ப்புக்கள், கவிதைகள், எதிலுமே இவை இல்லைமல் போய் அவை வெறும் வரண்ட படைப்புகளாகி விட்டன. இதற்கு அந்த இனக் குழுப்பார்வை அவரைச் சாப்பிட்டு விட்டமைதான் காரணம் என்பது என்னுடைய அபிப்ராயம். ஆகவே என்னுடைய பார்வை, கலையின் ஆழ்ந்த எல்லைகளை, தன்மைகளைப் பாதுகாப்பதுதானேதவிர, இந்தக் குறிப்பிட்டவர்களைப் பற்றி பகைமை இருக்கிறது என்பதோ அல்ல. என் விமர்சனத்தால் அம்பலப்பட்டுவிடாம லிருக்கவே இவர்கள் "பகைமை" என்கிறார்கள். எனது எழுத்துக்களை நுட்பமாகப் படித்து அதனைப் பிறநாட்டு இயக்கங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து - இதை உலகத் தளங்களிலும் செயல் படுத்தி - சமூக சரித்திரங்கள் அரசியல் சரித்திரங்கள் இவற்றோடு சேர்த்துப் பார்த்தால்தான் நான் செய்த வேலையின் நியாயம் புரியும். இது மிகவும் சீரியஸான ஒரு விஷயம்.

**கா.சு:** கவிதையில் உள்ள கவர்ச்சி எது?

**பிரேமிள்:** நீங்கள் கேட்கிற கேள்விக்கு அடியில் வேறொரு விஷயம் ஒளிந்திருக்கிறது என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது. அதாவது, இன்றைக்குச் சிலர் என்னுடைய கவிதையில் கவர்ச்சித் தன்மை இருக்கிறது என்று சொல்கி

www.padippakam.com

றார்கள். இங்கே கவர்ச்சி என்ற வார்த்தையை, ‘கிளாமர்‘ என்ற ரீதியில் அவர்கள் உபயோகிப்பதாகத்தான் தெரிகிறது. மேலும் இவர்கள் இதை அறுதியிட்டு இந்த விதமாகத்தான் நாங்கள் இதைச் சொல்கிறோம் என்பதற்காக, ஒரு கவர்ச்சிச் சினிமா நடிகையோடு என்னுடைய கவிதையைச் சம்பந்தப்படுத்தி அந்தவிதமான கவர்ச்சி என்னுடைய கவிதையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த விஷயமாக முதலில் என்னுடைய பதிலைச் சொல்லி விட்டுப் பின் நீங்கள் கருதக்கூயதற்கு வரலாம். அவர்கள் சொல்கிறமாதிரி பார்த்தால், கவர்ச்சி என்பது ஒரு குறைபாடான, மலிவான, மிக எளிதாக உருவாக்கப் படக்கூடிய வி'யம் என்றெல்லாம் ஆகிவிடும். இந்தவிதமான தன்மை எதற்கும அப்பாற்பட்டதுதான் கவிதை. எவ்விதக் கவர்ச்சிக்கும் அப்பாற்பட்ட ஓர் ஆழ்ந்து காந்த சக்தி கவிதையின் அமைப்பில் அதன் வீரிய த்தில் இருப்பதை ஒரு உணர்வுள்ள வாசகன் நிச்சயம் உணர்வான். நீங்கள் கவிதையில் கவர்ச்சி எது என்று கேட்டால் இந்த சக்தியை வீரியத்தைத்தான், நான் சொல்வேன். வார்த்தைகள் சம்பந்தப்பட்ட மாயாஜாலம், வாசகனுடைய உள்ளத்தை மிக ஆழ்ந்து, மிக
உயர்ந்து, உன்னதமான நிலைமைகளுக்குத் திடீரென்று ஏற்றிச் செல்கிறது என்ற அடிப்படையில், இதுதான் கவிதையின் கவர்ச்சி என்று சொல்லலாம். ஆனால் கிளாமருக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. கிளாமர் என்பது, மிகவும் அசிங்கமான விஷயத்தை மிகவும் பகட்டாக மாற்றுவது. அதாவது செக்ஸுக்கு கிளாமர் அதிகம் தேவைப்படுகிறது. ஏனெனில் செக்ஸ் என்பது partialy scatological ஆன ஒரு சமாச்சாரம். செக்ஸ் உறுப்புக்களெல்லாம் பாதிக்குப்பாதி கழிவு உறுப்புக்கள். ஆகவே இந்தக் கழிவு உறுப்பு என்ற பிரக்ஞையிலிருந்து, கழிவுத்தன்மை இல்லாத ஒரு பகட்டுத் தன்மைக்கு மாற்றுவதற்குத்தான் கிளாமர் தேவைப்படுகிறது. எனவே கவர்ச்சி எள்ற வார்த்தையை கிளாமர் என்று செக்ஸ் சம்பந்தமாகப் பயன்படுத்துவதுபோல், கவிதைக்குப் பொருந்த முடியுமா என்று யோசித்துப்பாருங்கள். இது மிகவும் அபத்தமான வி'யம் கவிதை இன்டலக்சுவலான அதிர்ச்சியை ஏற்படுத்துகிற ஒரு வெளியீடு. இன்டலக் சுவல் மட்டுமல்ல, ஆழ்ந்த தேடல் சமாச்சாரங்களில்கூட ஒரு அதிர்ச்சி யைக் கவிதையால் ஏற்படுத்த முடியும்.

**கா.சு:** “இளைஞர்களைக் கெடுக்கும்” விஷயங்களை - அதாவது செக்ஸ் சார்ந்த விஷயங்களை - பெருவாரிப் பத்திரிகைகளிலும் சரி சிறு பத்திரிகைகளிலும் சரி, பயன்படுத்தப்படுவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பிரேமிள்:** இனைஞர்கள் யார்? இவர்களைக் கெடுப்பது என்றால என்ன காரியம்? உதாரணமாக செக்ஸ் சம்பந்தமான போர்னோகிராபி நூல்களுக்கும், சினிமாக்களுக்கும், மேடைக் காட்சிகளுக்கும் சென்சார் இல்லாத சுவீடன், டென்மார்க் போன்ற நாடுகளில், இந்தச் சரக்குகளுக்கு இளைஞர்கள் அல்ல, மிகவும் முதியோர்கள்தான் வாடிக்கையாளர்கள். அந்தச் சமூகங்களில் இளைஞர்களின் செக்ஸ் உணர்வுகளுக்கு செக்ஸ் உறவுகளே வடிகால்களாகின்றன. முதுமையில் இந்த உறவுக்குரிய உடலின் கருவிகளும் கவர்ச்சியும் குறைகின்றன. அப்போதுகூட பழக்க தோஷமும் மனப்பீடிப்பும் தளர்வதில்லை. இதன் விளைவாகவே முதுமைக்கும் போர்னோ கிராகிக்கும் அங்கே தொடர்பு ஏற்படுகிறது. இங்கே பிரச்சனையின் மையம் வயது அல்ல, பழக்கமும் மனப்பீடிப்பும்தான். இவ்விரண்டையும் நாம் கேவலம் ஒரு சாதனத்தின் மூலம் உருவாக்கிவிட முடியுமா? நீங்கள் பத்திரிகை சாதனம் போன்ற ஒன்றை இவ்விடத்தில் கருதலாம். ஆனால் இதிகாசம், புராணம் ஆகியவைகூட இது வி'யத்தில் ஒரு சாதனம்தான். சாதனம் செய்வது ஐம்பது சதவிகித வேலையை என்றால், மீதியை சாதனத்துக்கு இலக்கானவனின் மனம் செய்கிறது. கோவலன், கண்ணகியைப் பரிந்திருந் ததைச் சிலப்பதிகாரம் குறிப்பிட்டால் அதற்கு இலக்கான ஒரு



படிப்பகம்

உள்ளம் கண்ணகியின் கற்பு நிலையில் பிரமிப் படையும். இன்னொரு உள்ளம், அவள் ஏதும் தவறானபாதையில் போயிருக்கலாம் என்ற "வக்கிரமான பார்வையில்" இறங்கும். கம்பனின் சீதை - ராவணன் விஷயத்திலும், இதே இருவகை எதிரொலிகளை இருவேறு உள்ளங்கள் ஏற்படுத்திக் கொள்ளும். எனவெ,"கெடுத்தல்" என்பது அர்த்த மற்றதாகிறது. கெடுபடக் கூடிய மனோபாவம் எந்த ஒரு சாதனத்தின் மூலமும் கெட்டே தீரும். பெருவாரிப் பத்திரிகைகளை அன்றி, மகா பாரதத்தைப் படிப்பதனால் இந்த மனோ பாவம் கெடாமல் நின்றுவிடாது. அங்கு கணவர்களின்றி பரபுருடர்கள் மூலம் திருதராஷ்ட்ர பாண்டு விதுரர்கள் பிறந்ததிலிருந்து ஐந்து தேவர்களுக்கு ஒரே தாயிடம் பிறந்த பாண்டவர்கள் ஒரே மனைவியை வைத்திருந்தது வரை ஏகப்பட்ட கெடுபாடுகள் உள்ளன. பார்க்கப் போனால் அன்று இத்தகைய கெடுபாடுகளுக்கு எத்தனைபேர் வாடிக் கையாளர்களாக இருந்தர்களோ, அதே வகையில் அதே அளவில்தான் இன்றும் ஒரு வாடிக்கை பெருவாரிப் பத்திரி கைகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. இன்னும் ஒன்று - குறிப்பாக தமிழகத்தின் பெருவாரிப் பத்திரிகைகளில் ஒரு மெல்லிய காமார்த்தம் ( soft pornography) பயன்படுத்தப்படுகிறது. விஷயம் இலை மறை காயாக்கப்படுகின்றது. இந்தத் தந்திரத்தில் கைதேரந்தவர்களே இன்றைய பெருவாரிக் கதையாளர்களாக பெருவாரிப் பத்திரிகைகளில் அங்கீகரிக்கப்படுகின்றனர். ஏனெனில் பத்திரிகைகளின் விற்பனைக்கு இலக்கு இளைஞர்கள் அல்லர் - முதியோர்களும் பெற்றோரும் நிறைந்த குடும்பங்களும் தாம். அவர்களே இப்பத்திரிகைகளுக்கு வாடிக்கையளர்கள். புராண இதிகாசங்களின் கதையம்சங்களை அவற்றின் இலக்கிய பூர்விகத்திலிருந்து கீழிறக்கப்பட்ட கடைத்தர வடிவுகளில் அனுபவிப்பவர்களும் அவர்களே. எனவே இளைஞர்கள் எங்கே? கெடுப்பது எங்கே?

--- --- ---

**கா.சு:** இவ்வளவு தூரத்துக்குப் போகும் நூலை **சி.சு.செல்லப்பா** போன்ற ஒருவர் குறிப்பிட்டு வந்தது ஆச்சரியமாக இருக்கிறது

**பிரேமிள்:** சி.சு.செல்லப்பா மூல நூல்களைப் படிக்காமல் அவைபற்றிய விமர்சனங்களை மட்டும் படித்துவிட்டு எழுதுவதாக க.நா.சு. குற்றம் சாட்டி இருக்கிறார். பார்க்கப்போனால் வெல்லப்பா என்ன வெ.சா.கூட "யுலிஸிஸ்ஸைப்" படித்தவர்தாமா என்பது என் சந்தேகம். உயர்வாக விமர்சகர்களால் குறிப்பிடப் படுகிறவற்றிலிருந்தே இவர்கள் தங்கள் பார்வைகளை உருவாக்கி இருக்க முடியும். எனினும் இது என் சந்தேகம் மட்டுமே. பார்க்கப் போனால், ஆழமில்லாத வாசகர்களுக்கு யுலிஸிஸ்ஸின் பக்கங்கள் அடைபட்ட கதவுகள்தாம். தமிழ் இலக்கிய எழுத்தாளர்களிடையிலே ஆழமான வாசகர் ஒருவரை இனித்தான் நான் சந்திக்கவேண்டும்.

--- --- ---

**கா.சு:** தினமணி சுடர் பேட்டியில், சுந்தர ராமசாமி, ஏதோ உலக நாவல் ஒன்றைத் தாம் எழுதிக்கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறாரே?

**பிரேமிள்:** இது ஒரு வெருட்டல், அதாவது - யாரோ ஒரு பறையன் ஞானியாகி விட்டான். எங்கோ ஒரு தெருவோரத்தில் நிஷ்டையில் உட்கார்ந்திருக்கிறான். நான் தரிசித்த இந்தியாவில் இது எப்பவுமே சம்பவிக்கக் கூடிய ஒரு வியப்பு! மும்முடி வரம் பாலயோகிக்கு நிறையக்கூட்டம் சேர்ந்தது. அவர் உணவு, நித்திரை எதுவுமே இல்லாமல் நிஷ்டையில் மூழ்கியிருந்த ஒரு மகான். ஆனால் அவர் பிராமணரல்லர், மிகவும் கீழ்க்குலத்தைச் சார்ந்தவர். அதாவது கொத்தடிமையாக இருந்த ஒருவர் என்று சொல்கிறார்கள். சரி இப்படி ஒருவன் உட்கார்ந்திருக்கிறான். நான் ஒரு பூசக வர்க்கத்தைச் சேர்ந்தவன் என்று வைத்துக் கொள்வோம். பூசக வர்க்கம் என்று

www.padippakam.com

இப்போது சுயவிளம்பரமாக சில்ர் உபயோகிக்கும் வார்த்தையைத்தான் நான் இங்கே திரும்பச் சொல்கிறேன். இதில் உள்ளவர்கள் தங்களுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது, அதற்கு? - ஞானத்தை அடைவதற்கு என்பார்கள். ஞானத்தை அடைவதற்கு எவர்க்கும் அதிகாரம் இல்லை. ஆனால் ஞானத்தை அடைவதற்கு அத்திவாரமான சில சாஸ்திரங்கள், சிலநூல்கள், சில ஸ்மிருதிகள் ஆகியவற்றைக் கற்பதற்கும் - குருவினிடம் போயிருந்து கேட்பதற்கும் - தங்களுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது - ஆகவே அதிலிருந்து பிறக்கக்கூடிய ஞானத்துக்கும் தங்களுக்குத்தான் அதிகாரம் இருக்திறது என்பதைச் சொல்லாமலே சொல்கிறார்கள். ஆனால் ஆத்ம ஞானத்தையும் காணோம், ஒரு மண்ணையும் காணோம். எனக்கு ஏழு வயசில் பூணூல் போட்டாகிவிட்டது என்று வைத்துக் கொள்வோம். பூணூல் போட்டாலே இரு பிறப்பாளனாகிவிட்டேன் - இரண்டாவது பிறவி எடுத்துவிட்டேன், ஆத்மஞானம் கிடைத்துவிட்டது என்பதுதான் அர்த்தம். ***உண்மையிலேயே ஞானம் கிடைத்த சந்தர்ப்பத்தில் யாரும் பூணூல் போடுவதில்லை.*** பூணூல் போடுவது ஒரு ஜாதீயச் சடங்கு. இது மிக அபத்தமான விஷயம். உலகில் எங்குமேயில்லாத மிக முட்டாள்தனமான விஷயம். பூணூல் போட்டால் துவிஜனன் ஆகிவிடுகிறான் என்பது மிகப்பெரிய புரளி, உலகத்திலே எங்கேயுமே இந்த மாதிரி உருபுரளி கிடையாது. சரி எனக்கு ஆத்மஞானம் வரவில்லை. ஆனால் அதற்குத் தகுதியுள்ள உரு பூசகக் குடும்பத்தில உள்ளவன். இப்போ நான் என்ன பண்ணனும்? நான் தபஸ் பண்ணிண்டிருக்கேன்பா, பிரம்மஞானம் வந்துடும்பா ஏனென்றால் எங்களுக்குத்தான் அதிகாரம் இருக்கு. பிரபஞ்சம் என் சுண்டுவிரலாயிடும். அதாவது இந்த முழுநட்சத்திரங்கள், அண்டம் எல்லாமே என் சுண்டுவிரல் மோதிரமாயிடும் என்று நான் சொல்லணும்.'. இப்படிப்பட்ட ஒரு பார்வையினுடைய - பிரகடனத்தினுடைய - நீட்சிதான், சுந்தரராமசாமி இன்றைக்கு உலகநாவல் எழுதிக் கொண்டிருக்கிறேன் என்று சொல்வதும்.

--- ---- ---

**கா.சு:** சம்ஸ்கிருதம் தெரியாதவன் நாவல் எழுதக்கூடாது என்று ஒருத்தர்(பூசாரியார்) சொன்னார் என்றீர்கள். அவர் நிச்சயமாக உங்களைப் பார்த்து இப்படிச் சொல்லமுடியாது சரிதானா?

**பிரேமிள்**: எனக்கு சம்ஸ்கிருதம் தெரியும் என ஊரை ஏமாற்றும் சந்தஸ்காரர்களுக்கும், பூசாரி எழுத்தர்களுக்கும் இல்லாத ஆய்வுக்குணம் என் அல்ப சொல்ப சம்ஸ்கிருத அறிவில் உண்டு. குறிப்பிட்ட பூசாரியார், எனது கவிதைகளுள், ***சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று காற்றின் தீராத பக்கங்களில் ஒரு பறவையின் வாழ்வை எழுதிச் செல்கிறது*** என்ற (பாவியம்) கவிதை மட்டுமே கவிதை என்றும், மற்றயவை தேறாதவை என்றும எனது கட்டுரைகளின் உரைநடையை இமிட்டேட் பண்ணி ஒரு கடமுடா கட்டுரையை எழுதியிருக்கிறார். (மீறலின் இவ்விதழுக்கு அனுப்பப்பட்ட இது மறுக்கப்பட்டுள்ளது.) அவரது கட்டுரையை ஒரு மதிப்பீடாக எடுத்தால், சம்ஸ்கிருதக் கவிகளான வியாசன், வால்மீகி, காளிதாஸன்- தமிழின் இளங்கோ, கம்பன் முதலியோர் - மேல்நாட்டின் ஹோமர், புஷ்கின், வெர்ஜில், ஷேக்ஸ்பியர், கீட்ஸ், மில்ட்டன், எலியட் - எவர் எழுதியதுமே கவிதையாகத் தேறாததாகிவிடும். இப்படி ஒரு நிலைமையை தமது கட்டுரை ஏற்படுத்துகிறது என்பதையே உணரமுடியாத மூளைக்காரருக்கு என் காவியம் மட்டும் பிடிபடுகிறதாம். உண்மையில் அவருடைய மூளையை காவியம் எட்டவில்லை என்பதும், இதன் எளிமையான வெளித்தனத்தை மட்டுமே அவர் ஏதோ லகுவாக ஜீரணமாகும் இட்லி என நம்பி உட்கொண்டிருக்கிறார் என்பதும் என் அனுமானம். ஏனெனில், இந்தக் கவிதையில் உள்ளது ஒரு படிமப் பிராந்தியம் என்பதே அவருக்குத் தெரியவில்லை. எனது மற்றைய கடினமான கவிதைகளின் அதே பிராந்தியம் இது. எளிமை என்பது இக்கவினையிலும் இதேபோன்ற வண்ணத்துப்பூச்சியும் கடலும் - முதலிய கவிதைகளிலும் ஒரு பரிபாஷைத்தன்மைதானே அன்றி தகவல் தரும்



படிப்பகம்

www.padippakam.com

சப்பட்டைத்தளம் இல்லை. பூசாரியார் இந்த சப்பட்டைத் தளத்தில் மட்டும்தான் இலக்கிய அபிப்ராய வியாபாரம் நடத்திண்டிருக்கார். இதற்கு மேலதிக ஆதாரமும் உண்டு

போர்ஹே, நபக்கவ் போன்று, புரிந்துகொள்ளக் கடினமான இலக்கிய மேதைகள் எழுதியவற்றை வெறும் பார்த்தைகள் என்று நாக்கதில் நரம்பில்லாத பாமரத்தனத்துடன் சுபமங்களா கூட்டத்தில் கூறியிருக்கிறார் இவர். படிப்பதற்கு புரிகிற வகையில் உள்ள டால்ஸ்டாயின் போரும் அமைதியும் தான் இவரால் முழுங்கக்கூடிய வெண்டைக்காய் சாம்பாராக மிளிர்கிறது. இவருக்கு ஏதும் சம்ஸ்கிருதச்சுரணை இருந்திருந்தால் என் ராகு கவிதையைத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டு கரகம் ஆடவேண்டும் இவர். ஏனெனில் இரண்டு சம்ஸ்கிருதப் பதங்களின் தாதுவடிவில உள்ள பொருட்களை அடிப்படையாகக் கொண்ட கவிதை ராகு. தமிழில் இவ்விதம் சம்ஸ்கிருதத்தைப் பயன்படுத்தி வேறு எவரும் கவிதை எழுதியதில்லை. கீழைத்தேய மரபுகளை உணர்ந்து அவற்றில ஆழ்ந்து எழுந்து மேலைத்தேய வெளியீட்டியலின் சிகரங்களாகப் படைக்கப்பட்ட லூயிஸ் போர்ஹேயின் படைப்புகளை இந்தப் பூசாரியால் உணரமு டியாதத்துக்கும் பூசாரியாரின் இந்த அறிவிலித்தனம்தான் காரணம்.

அறிவிலி என்றதும், மீண்டும் சந்தஸ்காரர் முன் வருகிறார். தவளைகளின் கூச்சல் கேட்டு தமிழ்க் கூச்சல் என்றான் கம்பன். ஆயிரம் வருஷம் போச்சு போயிற்றா தவளைக்கூச்சல் என்று அதுவும் தவளைகளின் கூச்சலாக தாம் கருதும் தொழியிலேயே சந்தஸ்காரர் அன்றொருநான் எழுதியவர், இத்தகைய பிதற்றல்களுக்காக எனது மதிப்பீட்டின் முன் நிர்மூல நிலை பெற்றவர் இவரை மீண்டும் பொறுக்கி எடுத்து பேட்டி வைக்கோல் திணித்து நிறுத்தியிருக்கிறது சுபமங்களா அதே பேட்டியில் மீண்டும் மேற்படி தவளைக் கூச்சல் - இதில் கம்பன் எங்கேய்யா இப்படிச் சொன்னான் காட்டு! என்று கேட்க எந்த மண்டைக்கும் தோன்றவில்லை. அதாவது என்றான் கம்பன் என்ற சொற்களைத் தவிர இந்தக் கவிதைக்கு முதுகெலும்பு கிடையாது. சரி. கம்பன் அப்படிச் சொல்லியிருந்தால் அதன் பொருள் என்ன? இங்கே கான் மொழி அறிவு தேவை என்பதும், இதுபற்றிய அறிவிலித்தனமே சந்தஸ்காரருக்கு உள்ள அத்திவாரம் என்பதும் கவனிக்கப்பட வேண்டும். கம்பன் கண்ட தவளைகள், தங்கள் ஞானசூன்யத்தை மறைத்து, வெறும் மந்தரங்களை ஓயாமல் அரற்றிக்கொண்டிருக்கும் பூசாரிகளைக் குறிக்கிறது என்கிறேன் நான். இவர்களின் கூச்சல் தமழ்க்கூச்சல் - தம்முடைய பேச்சு என்ற கூச்சல் அவர்களுடைய பேச்சு வெறும் கூச்சல் என்பதே உட்கிடை தமிழ் மொழிபற்றிய கருத்து இதில் இல்லை. தமிழ் மொழியைப் பற்றி கம்பராமாயணத்தின் ஆரம்பத்திலேயே உந்நதமாகப்பேசும் கம்பனிடத்தில் தமிழ்மொழியைத் தவளைக் கூச்சல் என்று கருதும் உட்கிடையை எதிர்பார்ப்பது அறிவீனம். மேற்கொண்டு ஆயிரம் வருஷம் போச்சு போயிற்றா ***தவளைக் கூச்சல் என்ற கேள்வி, கோமாளித்தனத்தின் எல்லையைத் தொடுகிற ஒரு நிர்மூடனின் மொழித்துவேஷத்தையே வெளிப்படுத்துகிறது***. இதையே மேற்கோள்காட்டி தம்மை தமிழின விரோதி என்று விளம்பரம் செய்வதற்காக 'தமிழின விரோதியா நான்' (உட்கிடை ஆம்) எனக்கேட்கிற இவருடைய நோக்கம் பூசாரி வர்க்க இனவாதப் பணமுதலைகளின் கடாட்சத்துக்கு தம்மை இலக்காக்குவதுதான். இவர்களுக்கு ஆதாரம் என்ன? - ***தாங்கள் எழுதுகிற மொழியின் மீதே துவேஷம் - தாங்கள் பயில முடியாத மொழி தங்களுக்கு அத்துபடி என்ற பம்மாத்து - இந்த அடிமட்டப் பாமர நிலையில் கூட பிறப்பின் அடிப்படையில் நாங்கள் ஒஸ்தி - நாம் தமிழரல்லர் என்ற பிரமை. விவேகத்தின் தீட்சண்யத்தோடு பழைமையைப்பார்த்தால் அதில்கூட இத்தகைய தவளைகளுக்கு ஒஸ்தியான இடம் கிடைக்காது. இத்தகையவர்களின் இயக்கங்களை இவற்றுக்கு உரிய சாக்கடைகளுக்கு திருப்பி விடுவதுதான்***, இந்தியாவின் ஞானார்த்தக் கலாச்சாரத்தைப் பேணுகிற ஒரே மார்க்கமாகும்.

www.padippakam.com

**கா.சு:** மொத்தத்தில் உங்கள் பார்வை லௌகிகத்தனமுள்ள எல்லாவற்றுக்கும் எதிரானது எனலாமா?
**பிரேமிள்:** ஞானார்த்தத்தை மூச்சிழக்க வைக்கிற எல்லாவற்றுக்கும் முரணானது என் பார்வை என்பது இன்னும் பொருந்தும்.

**கா.சு:** இன்னும் தொடர்ந்து இவ்விஷயத்தைப் பற்றி நேர்ப் பேச்சில் கூறி இருக்கிறீர்கள். முக்கியமாக, அமெரிக்கனிஸம் என்று இனம் காட்டப்படுகிற லௌகீகம் பற்றியும், அது ஞான மனோபாவங்களை மூச்சிழக்க வைக்கக்கூடிய சாத்யங்களைப் பற்றியும்.

**பிரேமிள்:** இவ்விடத்திலிருந்து விரிவாகத் தொடர இடமில்லை. மிக மிகச் சுருக்கமாகச் சொன்னால்: மார்க்ஸீயத்தின் குருட்டுத்தனத்துக்கு அகப்படாத அதிகார கேந்திரம் ஒன்று இன்று அமெரிக்காவிலேயே அம்பலப்பட்டிருக்கிறது. C.Wright Mills போன்ற மாஜி இடதுசாரிகளும் இன்றைய Bertram Gross (Fascism with a smile), G. William Domhoff ( Who Rules America) போன்ற பொருளாதார சமூகவியல்வாதிகளும் அமெரிக்க அதிகாரக் கட்டுமானத்தின் மறைமுக நிர்வாகிகள் மாபெரும் பணக்காரர்கள் (super-rich) ஆன ஒரு இருநூறு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்று விஞ்ஞான பூர்வமாகக் காட்டியுள்ளனர். ஒருபுறம் சர்வதேசிய மார்க்ஸீயப் பிரச்சாரகர்களும் மறுபுறம் இந்த அமெரிகனிஸ்டுகளும், ஞானார்த்தப் பாரம்பரியம் கொண்ட நாடுகளின் மதிப்பீட்டு நாளங்களை லௌகீகக் கொள்கைகள் மூலம் நிர்மூலம் செய்திருக்கிறார்கள். இதை உணர்ந்து, மக்கள் உணரும்படி செயல்படுவது இந்திய அறிவுவாதியின் உடனடிக் கடமை. எழுத்தியல் நண்பர்களுள் தீட்சண்யம் உள்ளவர்களை இது விஷயத்தில் நான் தூண்டிக் கொண்டிருக்கிறேன்.

**கா.சு::** லௌகிக மரபும், புரோகித (பூசக) மரபும், இரண்டாயிர வருஷமாக சமர் செய்வதாக நீங்கள் 'பூசாரி' என்று குறிப்பிடுகிறவர் கூறுகிறாரே?

**பிரேமிள்:** சமர் எதற்காக? வேறு எதற்காக ஓய்? லௌகிக லாபத்துக்காகத்தானே ஓய்? உலக்கைக் கொழுந்து லெவல் ஓய் இது! புரியலையா? புரோகித மரபு என்பதும் லௌகீக மரபு என்பதும் இவ்விடத்தில் ஒன்று ஓய்!
யார் புரோகிதன்? ராமக்கிருஷ்ண பரமஹம்ஸன் புரேகிதன். அவனைப் போன்றவனே லௌகீகத்தினால் தீண்டப்படாத புரோகிதன். அந்தப் புரோகிதன் லௌகீகத்தினால் தீண்டப்படாத புரோகிதன். அந்தப் புரோகிதன் லௌகிக மரபுடன் 'சமர்' பண்ணினவ-னல்ல. புரோகிதத்துவம் என்றால் என்ன? மண், நீர், தீ. காற்று, வெளி என்ற இயற்கையின் மூலங்களுடன் தன்னை ஒன்ற வைத்து, பூஜிக்கும் தெய்வத்துடன் ஒன்ற நாடுபவனே புரோகிதன். இதுவே புரோகித்துவத்தின் ஆகமநியதி. இவன் ஏன் லௌகீகத்டன் 'சமர்' பண்ணவேண்டும்? இவனது சமர் தனது லட்சியங்களுக்குத் தடையாக உள்ள தன்மயங்களுடன் மட்டுமேதான் நடக்கும்.

ஆனால் நமது மண்டுகப்பூசாரியார், இந்திய சரித்திரத்தினை இந்திய தத்துவஞானமாக மூளைபுரண்டுபோய்த் தரிசித்து அங்கே புரோகிதவர்க்கமும் ஷத்திரியவர்க்கமும் லௌகீக லாபத்துக்காக நடத்திய சமரை, புரேகித மரபுக்கும் லௌகீக அடிப்படை சார்ந்த பிற மரபுகளுக்கும் நடந்த சமராகக் கயிறு திரித்திருக்கிறார். நீங்கள் குறிப்பிடும் வாக்கியத்தில் புரோகிதர்களும் ஷத்திரியர்களும் லௌகீக முக்கியத்துவத்துக்காக நடத்திவரும் சமர்தான் இந்திய சரித்திரம் - இன்றைய அரசியல் வரை. இந்த அசட்டுப்பிசட்டு அழுகலுக்கு தத்துவ ஞானப்பவிஷு கொடுக்கிறார் நமது பூசாரியார்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த பூசாரித்தனம் ஞானார்த்தத்தை மூச்சிழக்க வைக்கக் கூடியது. ஞானிகளுக்கு எதிராக துஷ்பிரச்சாரங்களைச் செய்வது. வெளிநாட்டு லௌகீக இயக்கங்களும் இந்த பூசாரீயமும் இணையப் போகின்றன! கபர்தார்!

**கா.சு:** 'சிலப்பதிகாரம் மணிமேகலையும் தமிழரின் சமய வாழ்க்கையை ஆதரிக்க இயற்றப்படவில்லை. அவை சித்திரிக்கும் அற்புத நிகழ்ச்சிகள் பகுத்தறிவின்பாற் பட்டவையும் இல்லை. இகழ்ந்து பேசப்படும் புராணக் கற்பனைகளுக்கு இந்த அற்புத நிகழ்ச்சிகள் குறைந்தன அல்ல' இப்படி ***வெங்கட் சாமிநாதன்*** 14-2-93-ல் தில்லி தமிழ்ச்சங்கத்தில் சொல்லி இருக்கிறார். 'புதிய நம்பிக்கை' நிர்-54 ஜூலை 93 இதழில் இது வெளிவந்திருக்கிறது. தலைப்பு 'வையாபுரிப்பிள்ளை' நீங்கள் கண்ணகி பற்றி சில ஆழ்ந்த விஷங்களைத் குறிப்பிடுகிறீர்கள். அவரோ தமிழரின் சமய வாழ்வுக்கும் கண்ணகிக்கும் சம்பந்தமில்லை என்கிறார்.

**பிரேமிள்**: ஆராய்ச்சியாளர் **வையாபுரிப்பிள்ளைக்கும்** இந்த *வெ.சா.* கருத்துக்கும் என்ன சம்பந்தம் என்பதுதான் இந்த இடத்தில் பிறக்க வேண்டிய முதல கேள்வி. பழந்தமிழிலக்கியங்களுக்கு தமிழாராய்ச்சித் துறையினர் கூறி வந்த காலம் மிகப் பழமையானது. வையாபுரிப்பிள்ளை மேனாட்டு ஆய்வுமுறைகளைப் பின்பற்றி இவற்றின் காலங்களை தொன்மையிலிருந்து சமீபங்களுக்குக் கொண்டுவந்தார். 'நான் முந்தி வந்தவனா நீ முந்தி வந்தவனா' என்ற ஆரிய திராவிட ஓட்டப் பந்தயத்தில் இது ஆரியரை ஜெயிக்க வைத்து விட்டதாக தங்களை ஆரியர் என்று பம்பாத்துப் பண்ணி, தம்மைப் பேணிவரும், தமிழரை 'திராவிடர்'- புறம்போக்கர் - என்று இழித்துரைக்கும் பார்ப்பனர்களுக்கு குஷி இதன் விளைவாக 'வையாபுரிப்பிள்ளை' என்ற தலைப்பில் ஆய்வுக்கள் அறிவுக்கண் அற்று குருட்டடியாக பேசுகிறவை தலைப்பின் போர்வையில் சிறப்புப் பெற்றுவிடும் என நம்பி பேத்தோ பேத்து என்று ***வெ.சா. பேத்துகிறார்.*** இதனால் தமிழகத்தில் நேற்றுவரைகூட, தமிழர் வாழும் இலங்கையின் சில பகுதகளில இன்றுகூட இருந்த, இருக்கும் கண்ணகி வழிபாட்டில் இல்லாததாக்கி விடுகிறார். ***இன்று மருதியை இடித்த இதே பார்ப்பனீயம் அன்று கண்ணகியையும் வழிபாட்டு நிலையிலிருந்து அகற்ற முயன்றிருக்கிறது என்பதுதான் இதில் உண்மை.*** வையாபுரிப்பிள்ளையின் ஆய்வு கண்ணகி வழிபாடு இல்லாத ஒன்று என்று கூறுகிறதா? இல்லையே, உன் மண்டை மலத்தைக் கழிக்கிறாய்? திராவி டர் அல்ல, ஆரியரே ∴பஸ்ட் என்று நீங்கள் கள்ளுண்ட மந்திகளாய்க் குதிக்க வேண்டும் என்றா வையாபுரிப்பிள்ளை பழந்தமிழிலக்கியங்களின் காலங்களை பிற்காலங்களாகக் காட்டினார்? தமிழாராய்ச்சியாளரான அவரது வேலை தமிழிலக்கிய கால ஆராய்ச்சியுடன் நின்றுவிடுகிறது. இது எந்த பார்ப்பனர், ஜப்பானியர், எக்ஸ்கிமோக்காரருக்கும் குஷி உண்டாவதற்காகச் செய்யப்பட்ட ஆராய்ச்சி அல்ல. ஆராய்ச்சி அறிவலகச் சரக்கு. குஷியுலகச் சரக்கு அல்ல, புரியறதோ? அதுசரி, விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சியை தமது சரக்குகளுக்கு பார்பபனர்கள் ஏற்றிருக்கின்றனரா? தமிழரான வையாபுரிப்பிள்ளை தமிழுக்குச் செய்த இந்த வகையான ஆராய்ச்சியை பிராமணரான தர்மானந்த கோஸம்பி சம்ஸ்கிருதத்துக்குச் செய்திருக்கிறார். அவரது ஆராய்சிகள் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், ரஷ்யாவிலும் சம்ஸ்கிரதத் துறையினரால் ஏற்கப்பட்டவை. இங்குள்ள பார்ப்பனர்களால் குடுமிகள் கலைந்து பறக்கும்படி தலையாட்டி மறுக்கப்பட்டவை. தமிழருக்கு சிலப்பதிகாரம் சமயநூல் இல்லை, அதாவது அந்நூலின் நாயகியான கண்ணகதி தமிழரால் வழிபடப்படாதவள் என்கிறாய். இதன் மூலம் உன் சாமியைத்தான் தமிழர் பழிபட்டதாக சிசுகிசுக்கிறாய். உன் சாமிகள் யார்? சிவன், நாராயணன், முருகன், விநாயகர்,-

www.padippakam.com
இவர்களா?
சிவன் சிந்துவெளியின் பூர்வதிராவிடன், நாராயணன் என்பதே திராவிடப் பெயர் என்கிறார் தர்மானந்த கோஸாம்பி- இதைத் தடயமாக எடுத்தே நான் இங்கே ஏற்கெனவெ குறிப்பிட்டபடி இப்பெயரின் தமிழ் தாது வடிவங்களைப் பிரித்தறிந்தேன். முருகன், பச்சைத் தமிழன் , மலைக் குறவன். *விநாயக என்பது புத்தர்பிரானின் பெயர். மகுதி இடிப்பு மன்னர்களால் புத்தர் தலை உடைக்கப்பட்டு ஆனைத்தலை பொருத்தப்பட்டுப் பிறந்த சாமி அது.* உன் சாமி இந்திரன், வருணன், வாயு, யமன், சோமன் இத்யாதிகள்தாம். நீ இவர்களையா இன்று கும்புடறே? ஔறயே! துன்மாக்கனும் போதை வஸ்துக்காரனுமான இந்திரன்தான் அன்று உம் முழுமுதல் தெய்வம். சோமபானம் என்ற லாகிரிப் பொருள்மூலம் கொலை பாதகங்கள் கூட மனச்சாட்சியை உறுத்தாமல் பண்ணிவிடலாம் என்பதுதான் உன் தத்துவம். இதனால் புத்த சங்கக்கல்வியின் கணிப்பில் இத்தகைய தத்துவங்களைக் கொண்ட உன் வேதங்கள் சமயநூல்களல்ல லௌகிக நூல்கள் என்று வரையறுக்கப்பட்டன. வையாபுரிப்பிள்ளையின் வேஷ்டித்தலைப்பை விட்டுவிட்டு தர்மானந்த கோஸாம்பியைப் படி. சிந்துவெளிக் காலத்திலேயே அங்கிருந்த பூர்வ திராவிட அறிஞர்கள் மூலம் நீ உன் ஆரியக் காட்டுமிராண்டித்தனத்தை விடுகிறாய். பூர்வ திராவிடக் கடவுளரை ஏற்கிறாய். அவர்களை ஆரியப்படுத்துகிறாய். பிறகு அவை உன்னுடைய ஒரிஜினல்கள் என்கிறாய். *நீ யார்? ஒரு பக்கா சாமிக் கள்ளன்! A cultural plagia-rist* - இவ்வளவு சொல்கிறேன். இதற்கு முன்பும் எத்தனையோ கட்டுரைகளில் எவ்வளவோ **வெ.சா.** வுக்கு பதில் சொல்லியிருக்கிறேன். பிராமணீயத்தின் தாந்ரீகம் தமிழ் மூலங்களிலிருந்து பிறந்தவை என்றுகூட என்னால் நிரூபிக்க முடியும். அது ஒரு தனித்துறை. நிற்க. நான் கொடுத்த பதில் எதையும் வெ.சா. கண்டுக்கலை. காரணம், அவருக்கு அறிவார்த்த வெட்கம், intellectual shame, என்பதே இல்லாமல் ஆகிவிட்டது என்பததான். *சாமிக் கள்ளனுக்கா அறிவார்த்த வெட்கம் வரும்?*

**கா.சு:** மேலே நான் தந்த வெ.சா மேற்கோளின் ஒரு பகுதிக்கு நீங்கள் பதில் தரவில்லை. அதற்கு முன் - ஹிட்லரின் சரித்திரத்தை வெ.சா. நினைவு கூர்வதைப் பாருங்கள். அவன் பெரிய சங்கீதக் கலைஞர்கள், எழுத்தாளர்களை எல்லாம் நாடு கடத்தினான் என்கிறார். ஹிட்லர் எவரையும் நாடு கடத்தவில்லையே. கொன்று குவித்தான் - அல்லவா? இது வெ.சா வுக்குத் தெரியாதா என்ன?

பிரேமிள்: *வெ.சா. தமது பார்ப்பனீய மண்டலத்தை பயங்கரமாகப் பாதிக்கப்பட்ட மண்டலமாக பண்ணிக்காட்டும திருகுதாளம் இது.* தமிழகத்தின் திராவிட சுயமரியாதை இயக்கத்தை ஒரு பயங்கர இயக்கமாகக் காட்டுவதற்கு ஹிட்லரைப் பிடித்து வளைத்து நெளித்துக் கொண்டிருக்கிறார். ஏற்கெனவே இப்படி அவர் பண்ணியதுக்குப் பதில்கழள ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் தந்துள்ளேன். ஹிட்லரினால வெறுக்கப்பட்டு துஷ்பிரசார யந்திரங்களினாலும் கொலை முகாம்களினாலும் நிர்மூலம் செய்யப்பட்ட யூத இனத்தைச் சேர்ந்த இசைக் கலைஞர்கள் உட்பட, மொழி சாராத கலையான கங்கீதப் படைப்பாளிகள் சௌக்யமாக ஹிட்லரின் பாஸிஸ ஜெர்மனியில் இயங்கிய சரித்திரத்தை எடுத்துக் காட்டியிருந்தேன். சங்கீதக் கலையுள்ளம் மொழி சாராததால், மொழிமூலம் பிறக்கும் அரசியல் சமூக விமர்சனங்களை அதில வரா என்ற அடிப்படையே இந்த நிலைமைக்குக் காரணம் என்றும் காட்டியிருந்தேன். இப்போது மீண்டும் வெ.சா. ஓட்டைரிக்கார்டு போல் **'ஹிட்லர் பண்ண அநியாயம் மாதிரி இங்கேயும்'** என்று பேத்துகிறார். ஹிட்லர் ஜெர்மனியி


படிப்பகம்

www.padippakam.com

ல் செய்த அதே காரியம் அதே வழிமுறைகள் இங்கே இன்று பார்ப்பனீய ஹிந்து வெறி இயக்கங்கள் மூலம்தான் செய்யப்படுகின்றன.
எப்படி அங்கே ஹிடலர் அன்றைய ஜெர்மனியின் எல்லா கோளாறுகளுக்கும் யூதரைச் சாட்டினானோ, அதே போல இங்கே பார்ப்பனீய ஹிந்து வெறியர்கள் இந்தியாவின் எல்லாக் கோளாறுகளுக்கும் முஸ்லீம், கிறிஸ்துவ, சீக்கியரைச் சாட்டுகிள்றனர். எப்படி மிலிட்டரியையும உருவாக்கி அவற்றின் மூலம் ஒரு பயங்கரவாதத்தை முடுக்கனானோ அதேபோல பார்ப்பனீய ஹிந்த வெறி இங்கே, ஆர்.எஸ்.எஸ், பஜ்ரங் தள், ஹிந்துனோ, சிவசேனாக்களை உருவாக்கி அவற்றின் மூலம் ஒரு பயங்கரவாதத்தை முடுக்குகிறது.

இந்தக் கொந்தளிப்பைப் பற்றிப் பேசுவதை விட்டு வேறு எங்கோ பார்த்த நிலையில ஏன் 'ஹிட்லர் மில்லியன் கணக்கில யூதர்களைக் கொன்று குவித்தமாதிரி'...என்று உண்மையான சரித்திர விபரத்தை வெ.சா. ஏன் தூக்கத்தில் கூட உளறவில்லை? இதற்கு அல்ஜீப்ரா ஈகுவேஷன் தமிழக திராவிட இயக்கத்தில் இல்லை- ஏற்கெனவே பார்ப்பனீய ஹிந்து வெறியில்இஜக்கதிறது. அதனால்தான்! ஏற்கெனவெ இயக்கமும், வெ.சா மற்றும் சுந்தர ராமசாமி ஆகியோரது பார்ப்பனீய இயக்கங்களால் இருட்டடிக்கப்படுகின்றன. இந்த லட்சணத்தில் 'ஹிட்லர் எழுத்தாளர்களை நாடுகடத்தின' கதை ஒன்னை குறுக்கே விடுகிறார் வெ.சா ***பார்ப்பன இயக்கமாக தமிழின் சீரிய கலை இலக்கிய இயக்கத்தை உருமாற்ற வெ.சா.வும சு.ரா வும் படாதபாடு படுகின்றனர். இவர்களது பார்ப்பனீயக் கிசுகிசுப்புகளை கண்டுக்காமலோ, அதற்கு ஏஜன்ட் வேலை செய்தோ எழுதுகிறவர்கள் தான் சங்கப்பலகையில குந்தலாம்*** என இயக்கத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழுரை எலும்புத் துண்டுகளைப் போட்டு கூடையால் மூடிப்பிடித்து எனக்கு எதிராக மூளைச்சலவை செய்யும் முயற்சியும் நடந்திருக்கிறது. நடக்கிறது.

அதுசரி, எந்த சங்கீதக் கலைஞரை இங்கே நாடு கடத்தினார்கள்? மு.கருணாநிதி வீணை பாலசந்தரை நட்டுவக்காலி பிடிக்கிறமாதிரி காலைப்பிடித்துத் தூக்கிண்டுபோய் ஆபிரிக்காவில 'தொப்' என்று போட்டாரா என்ன? கருணாநிதியின் பராமரிப்பில் உள்ள 'முத்தமிழ் மன்ற'த்தில் வீணை பாலசந்தர் வாசிக்கிறார் ஸ்ரீநிதி ரங்கராஜன் நடனமாடுகிறார். ஸ்ரீநிதியின் நடனக் கருப்பொருள் கண்ணன். உட்கார்ந்திருந்து பார்ப்பவர் திராவிட இயக்கத் தலைவர். வெ.சா. என்ன டில்லியில் நன்று உளறுகிறார்? சித்தப்பிரமையோ? டில்லியில் கோடை கடும் சூடு, கூதிர் கடும் குளிர், கொஞ்சம் தமிழிநாட்டுக்கு வந்து அதன் வெட்பதட்ப நிதானங்களை நேரில் அறிவது அவரது மூளையின் ஆரோக்கியத்துக்கு உதவும்.

**கா.சு:** சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகியவறிறில் உள்ள அற்புதங்கள் பகுத்தறிவுக்கு ஒவ்வாதது என்கிறார். பகுத்தறிவு இயக்கத்தவர்களான திராவிடக் கட்சியினர். தி.மு.க.வினர் கொண்டாடும் காப்பியங்கள் இவை என்பதற்காக இப்படி வெ.சா. சொல்கிறார். இந்த இயக்கத்தினர் இகழும் புராணக் கற்பனைகளுக்கு இந்த அற்புதங்கள் குறைவு பட்டவை அல்ல என்கிறார். அற்புதங்கள் என்பது சாத்யக்கூறு கொண்டது அல்லவா? அற்புத சக்திகள் கொண்ட ஞானிகளுடன் நீங்கள் பழகி உள்ளதாகச் சொல்கறீர்கள்.

**பிரேமிள்:** அற்புதங்களிருக்க, முதலாவதாக திராவிட இயக்கத்தவர் பாமரர்களை பார்ப்பனீயர்கள் ஏய்த்துச் சுரண்டும் தளத்தில போராடியவர்கள். இன்றைய



படிப்பகம்

www.padippakam.com

காலகட்டத்திய பார்ப்பனீயத்தின் மார்க்கெட்தான் அவர்களது செருப்படிக்கு இலக்காயிற்று. சமூகத்தின் சகால ஏற்றத்தாழ்வை தமிழகத்துப் பெரும்பான்மை மக்கள் புரிந்து கொள்ளத்தக்க தோரணையில் அவர்கள் வெளிக்கொணர்ந்து காட்டினார்கள்.

மார்க்ஸீய கம்யூனிஸ சித்தாந்தம் இதை பொருளாதார சமூகவியல் விமர்கனமாகச் செய்து கொண்டிருந்தது. இது பாமரர்களுக்கு எட்டாத அரசியல் பண்டித எல்லைக்குள்ளேயே முடங்கிவிட்டது. காந்தீயத்தின் மனிதாயப்பட்ட பழைமைகள் பார்ப்பனீயப் பேரினவாதிகளால் தங்களுமைய மார்க்கெட்டுக்கு திருப்பட்டன. இந்நிலையில சுயமரியாதை இயக்கம் திராவிட இயக்கம் ஆகியவை தோன்றி பார்பனியத்தின் பஞ்சகச்சக் கட்டை உருவி அம்பலப்படுத்தலாயிற்று. இதைச் செய்யும்போது, பாப்பனீயர்களுடைய முத்திரை பொறித்த எல்லாவற்றையுமே இவர்கள் சாடினார்கள். இருந்தும் ஞானார்த்தத்தை இவர்கள் சாடியதில்லை.

ஈ.வெ. ராமசாமியின் உரைகள், எழுத்துக்கள் உள்ள நூல்களில் ஞானிக்கும் சித்தனுக்கும் கோவில் வழிபாடு வேண்டியிராததை அவர் குறிப்பிடுகிறார். ஈ.வெ.ரா. இன்றைய நவீனசரித்திரக் கட்டத்தின் மகாஞானியான ஜே.கிருஷ்ணமூர்த்தியைச் சந்தித்தவர். எவ்வித மதமரபையும் ஏற்காதவர் ஜே.கி. சங்கரரின் அத்வைதம், ஆத்மவாதம், பிரம்மவாதம் ஆகியவற்றையே நிராகரிப்பவர். புத்தர்பிரானின் அடிப்படைக் கொள்கையை மட்டும் ஏற்பவர். இதனால் அவரைத் தம்மவராகக் கண்டு பேச ஈ.வெ.ரா. போயிருக்கிறார். ஆனால் ஈ.வெ.ரா.வின் வெறுப்புவாதமும் வன்முறையும் தம்மிடம் இல்லாததை ஜே.கி. சுட்டிக் காட்டி இவற்றின் மூலம் உண்மையான புரட்சியைச் சாதிக்க முடியாது என்றார். இது, ஈ.வெ.ரா. வை உருமாற்றி ஜே.கி. சித்தரித்துப் பதிவு செய்த Hatred and Violence கட்டுரையில் உள்ளது. நூல் ஜே.கி.யின் 'காமன்டரீஸ் ஆன் லிவிங்'. இந்தச் சந்திப்பு ஈ.வெ.ரா.வின் போராட்ட முறையில் வன்முறையை விட விமர்சனத்துக்கு முக்யத்வம் தரும் திருப்பம் ஒன்றை ஏற்படுத்திற்று.

ரமணர் காலமானபிறகு அவர் தபஸ் செய்த பாதாளலிங்கக் கருவறையைப் புனருத்தாரணம் செய்த டெபரோஸா தலையார்க்கான், ஸி. ராஜகோபாச்சாரியைக் கொண்டு அதைத் திறக்க அழைத்திருந்தார். அப்போது ஈ.வெ.ரா. வைச் சந்தத்து, இதில் மதம் சம்பந்தப்படாததையும் மதங்களுக்கு அப்பாற்படட ரமணரின் ஞானார்தமே விசேஷிக்கப்படுகிறது என்றும் விளக்கியபோது ஈ.வெ.ரா. தமது முடிவை அப்போது வாபஸ் பெற்றிருக்கிறார். இவை, திராவிட இயக்கத்துக்கு பார்ப்பனீய மதவாதத்தின்மேலும் அதன் வாணாசிரமக் கொள்கை மேலும்தான் குறி என்பதைக் காட்டும் வெளிப்படை விஷயங்கள். ஞானார்த்தத்தை அவர்கள் தாக்கவில்லை. ஆனால் அதைத் தமது செயல்முறை அட்டவணைக்குள் உள்ளடக்கவுமில்லை. செய்திருந்தால் தமிழியலின் மிகத்தொன்மையான ஞானார்த்த மரபுகளை பார்ப்பனீயத்திலிருந்து தனிமைப்படுத்திக் காட்டும் பணி நடந்திருக்கும். இதைச் செய்யாததுக்குக் காரணம் திராவிட இயக்கம், கம்யூனிஸ இயக்கத்தின் தாக்குதலுக்கு தன்னை இலக்காக்கி விடக்கூடாது என்ற பார்வையாகவே இருக்க வேண்டும். ஞானார்த்தம் என்பதே பார்ப்பனச் சொத்து என்கிறமாதிரி ஒரு போலிப்பர்வையை பார்ப்பனீயம் வெகுஜனத்தினரின் உள்ளத்தில் நிறுவியிருப்பதுதான் இதற்குக் காரணம். ஞானார்த்தம் அற்புதங்கள் மூலமே தனது வெகுஜன ஸ்தானத்தை பெருமளவிற்கு இந்தியாவில் நிர்வகிக்கிறது. பார்ப்பனீயத்தின் மூலம் அல்ல. இதை பாமரர்கூட அறிவர் ஏனெனில் ***பாமரப் பின்னணியிலிருந்து வந்து அந்த பிரதேசத்தையே பெருமளவுக்கு தங்கள் செயல்களனாகக் கொண்டவர்கள்தாம் இந்திய ஞானார்த்திகள்.*** எனவே திராவி டஇயக்கம் தனது செயல்முறைப் பிரச்சார அட்டவணையில் இதைத் தவிர்த்தமை அதன் உள்ளார்ந்த பலவீனம் ஒன்றாகவே வளர்ந்துவிட்டது என்பது என் பார்வை. இருந்தும்

www.padippakam.com

தனிப்பட்ட அளவில் திராவிட இயக்கவாதிகள் ஞானார்த்த மரபுடன் தொடர்பு கொண்டிருப்பவர்கள்தாம். இவர்கள் சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் போற்றுகிறார்கள்.- பார்ப்பனீய புராணமூட்டைகளை இழிவுபடுத்துகிறார்கள் என்றால் அற்கு இவ்வளவு பின்னணி உண்டு. மணிமேகலையின் அட்சய பாத்திரம் *'மாங்காய்ப்பாலுண்டு மலைமேலிருப்ப'* குறியீடு. இது ஒரு அநாதி அகவியல் குறியீடு -Arehetypal sympol, இதே தான் கண்ணகி இடமுலையைத் திருகி எறிந்து மதுரையின் தீமை, பொய்மை, நசிவு ஆகியவற்றை எரித்ததுவும். சிலப்பதிகாரத்தில் நன்மை, தீமை மோதலைச் சித்தரிப்பதற்காக சாத்யக்கூறுகளுக்கு அடங்காத அதீத கற்பனைகள் எழுப்பப்படவில்லை. அதில் அவதாரங்களில்லை, அஸ்திரங்களில்லை, அக்குரோணீக்கணக்கதில் எதிராளிகளைக் கொன்றுகுவிக்கும் வன்முறைத் தீர்ப்பு இல்லை.

பார்க்போனால் கிறிஸ்துவமும், புத்தமதமும் இத்தகைய வன்முறைத் தீர்ப்புகளை தமது மதங்களின் அத்திவரங்களாகக் கொண்டிருந்தவையல்ல. இஸ்லாமிலும் முகம்மது நபி, தற்காப்புக்காக மட்டுமே அதுவும் ஒரு தவிர்க்கமுடியாத திருப்பத்தில் ஆயுதம் தாங்குகிறார். ஆனால், பார்ப்பனீயத்தின் ரிக்வேத மூலகமே போர்த்தெய்வமான இந்திரன்தான். பின்னாடி சிந்துவெயியிலிருந்து சுவீகரித்த எக்ஸட்ராக்களான, சிவன், நாராயணன், முருகன், விநாயகர் ஆகியோர்களைப்பற்றிய புராணங்கள் எல்லாமே போர்மூலம் வன்முறைத் தீர்வு தருவதாகவே சித்தரிப்பப்பட்டன. திரவிடபூர்வீக தேவதையான கண்ணகியின் தீர்வு எந்தவிதமான அஸ்திரப்பிரயோக மாய்மாலங்களையும் சாராதது. அவள் மதுரையில் எழுப்பிய தாமாக்நி அவளது பூததேகத்தின் இடமுலையைத் திருகிய சுயபலியிலிருந்தே பிறக்கிறது. தன்னதழிவின் அம்சம் இது. தனது உடலையே பிய்த்து எறிந்துதான் அவள் தர்மவிரோதிகளின் சமூகக்கூட்டமைப்பை எரிக்கிறாள். இதற்கு ஆதாரம் அவளது கற்புநெறி. இந்த ஸ்திரீதர்மம் அவளிடம் இல்லாதிருந்தால் நசிவடைந்த ஒரு அரசுகட்டிலின்முன் நீதி கேட்பவளாக அவள் நின்றிருக்கமுடியாது. ஆக, பூர்வகாலங்களின் கட்டத்தில் இத்தகைய ஒரு உந்நதத்வம் உலகில் வேறு எங்குமே பிறந்ததில்லை. இந்தக் கண்ணகி பார்ப்பன ஆதிக்கத்தில் என்ன ஆனாள்? மீனாஷி ஆனாள்.

இது சற்றே சிக்கலான விஷயம். இளங்கோவுக்கு முந்திய காலத்திலேயே இது நடந்துவிட்டது. இதனால் கண்ணகி பூர்வகுடியின்ரால் தொடர்ந்து வழிபட்ப்பட மீனாஷி அவளிலிருந்து வேறுபட்ட ஒரு தனித் தெய்வமாக்கப்பட்டாள். இந்நிலையில கண்ணகி கதையை சிலப்பதிகாரமாகப் பாடிய இளங்கோ, மீனாஷி குடிகொண்ட வெள்ளியம்பலம் கண்ணகி காலத்திலேயே இருந்ததாகக் கொண்டாலும்கூட, அதில் மீனாஷி குடிகொண்டிருந்தாளா, பூர்வ திராவிக் கடவுளான சிவன் குடிகொண்டிருந்தானா என்பதில் தெளிவில்லை. இளங்கோ தமது காலத்திய மக்களிடையே நிலவிய கதையைக் காவி யமாக்கினார். அந்தக் கதையில் பன்னெடுங்காலமாக பாராட்டப்பட்ட கண்ணகி, இடையில் பார்ப்பனரால் மீனாஷி ஆக்கப்பட்ட பின்பு இளங்கோ சிலப்பதிகாரமாக கண்ணகி கதையைப் பாடுகிறார். ஒரு தளத்தில இந்தக் கதை நீதி இயலின், Jurisprudence இன் கதை - குற்றம் சாட்டப்பட்டதும் அந்த அடிப்படையிலேயே தீர்ப்பை வழங்கிவிடுவது நீதி இயலுக்கு அவசியமான அறிவார்த்தக் கட்டுமானத்தை மறுப்பதாலும் என்ற விஷயமே இந்தத் தளம். எனவே இது பகுத்தறிவு சார்ந்தவிஷம். 'எவன் எதைச் சொன்னாலும் அதன் உண்மையை விசாரித்து ஆதார பூர்வமாக அறி வேண்டும்' என்பது சமூகப் பிரக்ஞைத் தளத்தில் இங்கே வலியுறுத்தப்படுகின்றது. 'நான் சொல்வதை நம்பு, விசாரணையற்ற நம்பிக்கையே உண்மையை அடைய வழி' அன்ற பார்ப்பனீயத்துக்கு எதிரானது இது. இளங்கோ அரசியல் பின்னணி கொண்ட சமண சந்யாசி என்பதை நினைவில கொள்ள வேண்டும். இவ்விடத்தில் நீதியியலுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

இடையே உள்ள தர்மநியதியின் மெய்மையை சந்தேகத்தின் பாதையில்தான் அடையலாம் என்பது பெறுபேறு. சந்தேகம் என்றால் ஏற்புமல்ல மறுப்புமல்ல. ஏற்பு பார்ப்பனீய மேலாதிக்கத்துக்கும் மறுப்பு லோகாயதச் சீரழிவுக்கும் இட்டுச் செல்கின்றவை. இது சிலப்பதிகாரத்தின் ஆன்மிக மனோவியல் தளம். இது பகுத்தறிவின் சிகரநிலை.

புராணங்கள் இத்தகைய மனோவியல் நிலையை எழுப்புகிறவை அல்ல.'. வன்முறையே தெய்வீகம் என்கிற மனோபயத்தையே அவை எழுப்புகின்றன. பாரப்பன சாமியைக் கும்புடோணும், தட்சணை குடுக்கோணும். என்ற பச்சை பிஸினஸில் இதுபோய் முடிகிறது. செயல்முறை ஆன்மவியலாளன் முதலில் இந்த மனோபயத்தையும் இதற்கு ஆதாரமான பௌராணீக சாமி பூதங்களையும் தூர நிறுத்துகிறவன். கண்ணகியின் நெறி கற்பு. இது செக்ஸ் உணர்வை தெய்வீகப்படுத்தும் நெறி. பெண்ணுக்கு மட்டுமல்ல ஆணுக்கும். கற்பு அவளது நெறி என்றால் தனக்கு துரோகம் இழைக்கும் கணவனை அந்த நெறிக்கான ஆதாரமாகக் கண்டு - 'கொழுநன்' - பற்றுக்கோல் - ஆகக் கண்டு 'தொழுது எழுபவள்' திருக்குறளில் 'தொழுது எழுவாள்' எனும் போது 'எழுதல் ' ஆன்மீக மேம்பாட்டைக் குறிக்கிறது. இவ்வழி மேனிலைபெறும் பாதையில கணவன் மீது வெறுப்பு ஏற்படாத வகையான விழிப்பு நிலையைப் பேணி ஆகவேண்டும். இதுதான் 'கண்ணகி' என்ற பெயரில் ஒளிந்திருக்கும் நிலை. கண் + அக + இ = அகக்கண் கொண்ட நிலை, விழிப்புநிலை. அகக்கண் துயிலாக ஒரு விழிப்பு நிலையில் உள்ளது.

இவ்வித நிலைதான் 'தொழுதல்' இந்தப் பதத்தின் பின்னணியில் 'தன்னுள் ஆழ்தல்' என்ற பொருள்தான் உண்டு. "கும்பிடுதல்'' கூம்பிடுதல் . 'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப்பெய்யும் மழை' என்ற குறளின் ஸ்திரீதர்மம் சார்ந்த ஆன்மவியல் கண்ணகியின் கதையில் எதிரொலிக்கிறது. எனவே தமிழ் மரபின் மிகத் தொன்மையான ஒரு ஆன்மீகக் குணாம்சமே சிலப்பதிகாரத்தில் பாத்திரவடிவம் பெற்றிருக்க வேண்டும். இவ்வித நிலை பெற்றவளது தர்மரோஷம் மெய்மையின் ஊட்ட சக்திக்குறியீடான முலையையும், நிர்மூலசக்திக்குக் கேந்திரமான இடது - அதாவது வாம - பாகத்தையும் கண்ணியிடத்தில் அக்னி வடிவுக்குக் கொண்டு வருகிறது. எனவே இது கிளாஸிக்கல் இலக்கிய சரித்திரத்தில் எங்குமே காணமுடியாத அபூர்வமான கதை. இதை ஓரங்கட்டி உருவாக்கப்பட்ட மீனாஷி கல்யாண வைபோகத்தில் இந்த ஆழ்ந்த அம்சம் எதுவுமே கிடையாது.

இவ்விடத்தில், கண்ணகி மீனாஷி ஆனதுக்கான என் ஆதாரம் ரொம்பவும் எளிமையானது. ஆன்மிக சூட்சுமம் ஒரு இத்துணூண்டு உள்ளமையாலேயே என்னால் இதைக் கண்டுபிடிக்க முடிந்திருக்கிறது. கண்ணகி, துயிலாத அகக்கண்ணி, மீனாஷி, மீன்கண்ணி. நமது பண்டிதர்கள் மீன்கண் என்றால் மீன் வடிவக்கண் என்பார்கள். இந்தப் பிசகின் பாரம்பரியம்தான் உண்மையை மறைக்க உதவியிருக்கிறது. மீகண் என்றால் மீனின் கண் என்பதே பொருள் . மீனின் கண்ணுக்கு உள்ள விசேஷம் அது மூடாதது என்பதுதான். எனவெ மீனாஷியின் தாத்பர்யம், மூடாத, அதாவது துயிலாத கண்ணி என்பதே. துயிலாதது அகக்கண்தான். எனவே மீனாஷி = கண்ணகி. மீனாஷி ஆக்கப்பட்ட கண்ணகியின் செயல் வடிவமான சக்தி மீனாஷியின் ஆத்துக்காரரான சிவ-னிடம் போய்விடுகிறது. அதாவது, கண்ணகி வழிபாட்டிலுள்ள மாத்ருமூர்த்ததம், matri-archy, இங்கே பிதருமூர்த்தம், patriarchy ஆக்கப்படுகிறது. பெண்விடுதலை இயக்க வீராங்கனைகள் கவனிக்க வேண்டிய விடயம் இது. அவர்களது அகராதிப்படி இங்கே பார்ப்பனீயம் 'ஆணாதிக்கப் பன்றி'- male chauvist pig- ஆகவே செயற்பட்டிருக்கிறது.

இந்தக் கதையில் , மீனாஷி அல்ல, சிவனே செயல்மூர்த்ததி. கண்ணகியின்

www.padippakam.com

இடமுலைத்தீ என்ற தர்மரோஷம், சிவனின் சர்ப்பம் வளைத்து அதன் வளைவுக்குள் நிறுவப்பட்டதே மதுரை என்பது பார்ப்பனக்கதை. இதனால்தான் சம்ஸ்கிருதத்தில் மதுரையை ஹாலாஸ்யம் என்கின்றனர். இங்கெ கண்ணகியின் இடப்புறம் அதாவது வாமபாதம், சிவனின் சர்ப்பமாவதில ஒற்றுமைக்கு அடிப்படையாக உள்ளது. மிக ரகசியமாக ஞானார்த்திகள் உணரும் வாமச்சார மார்க்கத்தைச் சார்ந்தது. பசிசுத்தமான உள்ளங்களே இந்த வாமச்சாரத்தைஉரியவகையில் உணர முடியும். 'தொழுது எழல்' அதுவும் வெய்வத்தை அல்ல 'கொழுநன்'னை என்பதில் பூடகமாக இதுவே தொனிக்கிறது. 'வலப்புற' அணுகுமுறையான தஷிணச்சாரம் ஆசையை அடக்கும் நெறி என்றும், வாமச்சாரம் ஆசையை அடக்காத நெறி என்றும் சொல்லலாம். ஆனால் இது ஆசையின் திருப்தி அல்ல.

'ஐந்தும் அடக்கடக்கென்பர் அறிவிலார்
ஐந்தும் அடக்கும் அமரரும் அங்கிலை
ஐந்தும் அடக்கில அசேதனம் ஆகுமென்றிட்டு
ஐந்தும் அடக்கா அறிவறிந்தேனே'

என்ற திருமந்திரத்தில் மஹாஸித்தன் திருமூலன் சொல்கிற 'ஐந்தும் அடக்கா அறிவு' இது . எனவே இது அறிவாக 'எழல்' இந்தப் பின்னணியில்தான் ஆன்மிக பரி-மாணத்துக்கு கற்புநெறி செல்ல முடியும். வெறுமே 'அடக்குதல்' மரத்துப்போன அசேதனத்தில்தான் முடிவுறும். செயல்முறையாக ஆன்மிகத்தேடலில் இறங்குவோரின் களம் இது. பாம்பு, ஆசையை அடக்காத ஒரு ஹாலகால நிலை, மரணப்பதைக்கு இட்டுச்செல்லும் ஆசையின் நிலை. இதுவே தன்னதியல்பான ஸ்திரீதத்துவம். இடப்பாகம்.
ஜே. கிருஷ்ணமூர்த்தி, ஆசை தோன்றும் போது அதை அடக்காமல் அதே ஆக நிற்கும் கணத்தை குறிப்பிடுவதையும சாது அப்பர்துரை எண்ணம் எழுப்பும் முளையான சந்திசமயம் பற்றித நான தொகுத்த 'தியானதாரா'வில் சொல்வதையும் இவ்விடத்தில் கவனிக்க வேண்டும்.

நாம் இப்படி எங்கேயோ பூமி, சூர்யமண்டலம், எல்லாவற்றையும் தாண்டி விண்வெளிப்பயணத்தில் போய்க்கொண்டிருக்கிறோம். அங்கே, தில்லித் தமிழ்ச் சங்கத்திதல் 'அது' நின்றுகொண்டு தமிழரின் சமய வாழ்வுக்கு சிலப்பதிகாரம் ஆதாரமா, என்று கேட்டபடி, "புராணங்கள்தானே? நம்பளாத்து கொல்லையிலிருந்து கிளம்பிய ராம-ாயணம்தானே?" என்றொரு கிசுகிசுவும் பண்ணி, 'கெக்கெக்கே!' போட்டுக்கறது. தமிழரின் புராண ஆகம காலத்தை எடுத்தால் , அதன் ஆதாரம் ராமாயணம் அல்ல, கம்ப ராமாயணம் எனக் காணலாம். இதன் சம்ஸ்கிருத மூலகமான வால்மீகி ராமாயணததில், ராவணன் சீதையை அபகரிப்பது எப்படி? லஷ்மணரேகையை தாண்டிய அவள் கபடசந்யாஸியாக வந்த ராவணனுக்கு பிஷை இட சமீபித்ததும் அவன் சுயரூபி ஆகிறான். சீதையைத் தூக்கியபடி அந்தரத்தில் எழுந்து உயரநின்ற விமானத்தை அடைகிறான். அப்படி சீதையை ராவணன் தூக்கும்போது அவனுடைய கைகள் அவள் அல்குலையும் முலைகளையும் பற்றிப் பிடித்திருக்கின்றன சம்ஸ்கிருதத்தில். ஆனால் கம்பராமாயணத்தில் சீதையை அவளது விருப்பமின்றி ராவணனால் தீண்டமுடியாது - தீண்டினால் பஸ்மீரமாகி விடுவான் என்ற கற்பு நெறியின் ஆத்மரோஷம்தான் நிலைமையை வரையறுக்கிறது. இதனால் தமிழில் ராவணன் சீதையைச் சிறையெடுப்பதற்காக அவள் நின்ற நிலத்தையே பெயர்த்து எடுக்கிறான். இதுதான் தமிழ் விசேஷத்துவம். இதுவே சிலப்பதிகாரத்தின் ஆளுமைதான். வடக்கத்தியக் கதைகளுக்கு முன்பே தமிழ் நிலத்தில் நிலவிய ஆளுமை இது. இதனுடன் இசையக்கூடிய மதிப்பீடுகளைத்தான் தமிழர்கள் ஏற்றனர். அதுவும் வால்மீகி ராமாயணம், கம்பன்வழி



படிப்பகம்

பெற்றது போன்ற திருத்தங்தகளுடன். வால்மீகி ராமாணயத்தையே எடுத்தால் அதைக்கூட பார்ப்பனர் உரிமைகொண்டாட இடமில்லை. ஏனெனில் அதைப் பாடியவன் பரம்பரைத் திருடன். கவித்வமும் ஞானார்த்தமும் ஜாதீயயத்தை மீறியது என்பதற்கு வால்மீகியாக மாறிய ரஜ்ஜன் ஒரு மகத்தான சாட்சி. இவனுக்கு மந்த்ரோபதேசம் செய்வதற்காக நாரதர் என்று பௌராணீகப் படுத்தப்பட்ட ஒரு மகாத்மா முன்வந்திருக்தகிறார். இதை மஹாவிஷ்ணு தடுத்து சபித்ததின்விளைவாக நாரதர், தாம் ரஜ்ஜனுக்கு உபதேசிக்க எடுத்த மந்திரத்தை மறந்தார். என்ற புளுகு மூட்டையை உதைத்து அப்புறப்படுத்திவிட்டுப் பார்த்தால்தான் நாரதரது புரட்சிகரம் புரியும். ...

முடிவில் ரஜ்ஜன் ஒலியற்ற ஒலியை அடைந்து வால்மீகியானான். தனக்குத் தரப்பட்ட ஒலிவடிவையே 'ராம்'ஆக்கி அதற்கு இந்திய உபகண்டம் முழுவதும் சிதறிப்பரந்த அவதார வடிவைச் சிருஷ்டித்தான். பிராமணரல்லதாரும் சமஸ்கிருதத்திலேயே சிருஷ்டிக்கும் நிலை இவ்வாறு பரந்துபட்டு வழழங்கியிருக்கிறது. காரணம் அது ஸ்தாபன மொழியாக இருந்தமைதான்.

இதில் பார்ப்பனர் கெக்கலிக்க இடமில்லை. ராமகாதையின் காவிய மூலகர்த்தா ஒரு திருடன் என்பதோ அதைத்தமிழ்ப்படுத்திய கம்பநாடாழ்வார் பெயரில் பார்ப்னீயம் இல்லை என்பதோ வெசா.போன்ற பார்ப்பனரது வெட்கம் கெட் மூளைகளுக்கு புலனாவதில்லை. தமிழர்களுடைய மதம் நாங்க குடுத்த மதம் என்பதைவிட தமிழர்களின் வழிபாட்டு நிலைகயங்களைப் பார்ப்பனர் தந்திரமாகக் கைப்பற்றினர் என்பதைத்தான் ஏற்கலாம். மறுபுறம் தமிழர்களின் சுயாதீனமான ஆன்மீக மரபிற்கும் தியான மரபிற்கும் நீங்காத சாட்சியாகத் தமிழ் மொழியுடே நிற்கிறது. 'வீடு' என்ற பதத்திற்கு ஒரு பொருள் வசிப்பிடம். இதன் தாதுக்களைப் பிரித்தால் வி + உடு , உயர உள்ள நட்சத்திரம். இது 'விடு' என்ற வினைச் சொல்லாகவும் ஆகும். விட்டால், 'வீடு என்பது மோட்ச நிலையாகவும் ஆகிறது. விடுதலையின் ஆதாரம் கூட விடுதல்தான். ஏற்கெனவே இங்கே இத்தகைய உதாரணங்களைத் தந்திருக்கிறேன். இவை வழிபாட்டையும் மதப் பிரிவினை அமைப்பையும் தாண்டிய தியான மார்க்கத்தின் தடயங்கள்.

**இது எதுவும்** வெ.சாவின் **அறிவிலி மார்க்கத்தில் கிடைதிருக்க முடியாத விபரங்கள். இதனால் தமிழின் பூர்விக திரிசனங்கள்** பாற்பட்ட **சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதது என்கிறார்.** ஏன் என்றால் இந்த நூல்களைக் கொண்டாடும் திராவிட இயக்கத்தினர் பகுத்தறிவுவாதிகள் என்பதாலதானே? அப்படியானால் வெ்சாவுக்குப் பகுத்திறவு என்றாலே அலர்ஜி. அப்போ பேஷாக பகுத்தறிவுக்கு ஒவ்வாத விதத்தில் "கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே மண்தோன்றி மூத்த தமிழ்" என்ற சூத்திரத்தை ஒதுக்கலாமே?. ஏன பகுத்தறிவின் பாற்பட்ட வையாபுரிப்பிள்ளையின் நவீன ஆய்வுமுறை வேஷ்டிக்குள் தலையை உடற? அவருக்குச் செருப்படி கிடைத்ததாக ஒரு கேள்விப்பாடும் பட்டுக்கிறே, உன் உரையில் "தமிழரது களவொழுக்கம்" என்று நாக்கில் நரம்பில்லாமல் நீ பேசறப்போ தமிழ்க் குடும்பப் பெண்களிடமிருந்து உனக்கு என்னடா கேட்கிறது?

**கா.சு:** பழந் தமிழிலக்கியத்தில் எங்கோ 'ஐயர்' இருப்பதாக யாரோ சொல்லக் கேட்டுக் குஷியில் கும்மாளம் இடுகிராரே வெ.சா?

**பிரேமிள்:** இதற்குத் திருவள்ளுவரின் தனிப்பாடல் ஒன்றுதான் பதில். தம்மை ஐயர் என்று அழைத்தவர்களுக்கு ஐரானிக்கலாக இங்கே பதில் தருகின்றார். 'அவ்விதம் அழைக்கப்படுவோருக்குத் தகுதி உண்டா ?' என்பது கருப்பொருள்:
"ஐயரென்றுரைத்தீர் நாயேற் கடுக்குமோ வருளிலுனை

www.padippakam.com

# எது மரணம்?

முகங்கொள்ள மறுத்து ஓடி விடுவதா?
சொந்தக் கருத்தின்றிச் சோர்ந்து திரிவதா?
எப்போதும் மரணம் நம்முன் நிற்கிறது.

**பிரமிளுக்கு**

விட்டுக்கொடுத்து வளைந்து போகையில்
செத்துத் தொலைக்கிறோம்
என்பது தெரியாமலே
சாவதும்
சொல்லும் கருத்தை வெளியில் ஒன்றும்
மெல்லும் கருத்தை உள்ளில் ஒன்றுமாய்க்
காவித் திரிவதும்
பிணத்தின் கீழாம்

நினைப்பது சொல்லும் வருவது எழுதும்
நாட்களில்லையென்று
மூசிப் பெருமூச்சு விட்டு
கொள்ளும் இரவின் உறக்கமும்

முன்னால் விழுந்த கேள்விகளின் பதிலைச்
சொல்லாமல் விடுவதும்
தற்கொலை
முன்னே பல்லிளிப்பது பின்னே வேறு பேசி
முகத்தில் நிலக்கண்ணி வெடிப்பதன் சமமே

கூட்டுச் சேர்த்து எழுதிக் கொள்வதும்
பதுங்கிப் பார்த்து தூரமாய் நிற்பதும்
வடக்கிருத்தலே
அறிந்தது படிப்பதும் அறியாதது தெரியாததும்
மரணித்த மூளை
அறிந்ததை மறுப்பதும் புதியதை வெறுப்பதும்
உணவு மறுப்பு.
சாவது தெரிந்தும் தெரியாமல் இருப்பது இன்னொரு சாவு.

-எஸ்.வி.ர.ஃ.பேல்



படிப்பகம்

www.padippakam.com

பொய்யொடு களவு மற்றுப் புலன்களையொடுக்கிக்கொண்டு
உய்யவே புலன்களைந்து முயர்பர வெளியுளாக்கி
வெய்யவன் மதியம்போல விரவுவரையராவர்''

திருவள்ளுவர் ஐயர் என்று அழைக்கப்பட்டதிலும் சரி, அதற்குரிய தகுதிகள் இவை என்று அவர் கூறுவதிலும் சரி அது பார்ப்பன ஜாதியைக் குறிப்பிடவில்லை. பழந்தமிழ் சமூகக் கட்டுமானத்தில் ஐயர் என்பது உந்நத நிலை, பெற்றோரைக் குறிப்பிடும் மரியாதை விளிப்பு. இது பார்ப்பனர்களால் தங்களது பிறப்பு அடிப்படையிலான ஜாதியை க்குறிப்பதாக திருடப்பட்டிருக்கிறது. ஐயர் என்ற பத்துக்கு சமஸ்கிருத மூலகம் கிடையாது. இதில் தமிழ் தாது மூலகங்க்களே உள்ளன.

'அ என்பது அகர முதல என்ற முதல் குறளில் தொக்கி நிற்கும் ஆதி நிலை, First Principle. 'இ' என்பது இருப்பு நிலை, ஶநைபெ. நான் எற்கெனவே குறிப்பிட்ட தாந்ரீகத் தமிழ்ப்பூர்விகத்தின் அம்சங்கள் கூட இதில் உள்ளன. 'அன்' என்பது விகுதி. அ + இ +அ +ன் = முதல்வன், ஆதிநிலையில் கலந்தவன், ஆசான்... இதில் வெ.சா கும்மியடிக்க அவருக்கு ஒரு மண்ணும் இல்லை, திருட்டுப் பட்டத்தைத் தவிர. மேலுள்ள கவிதையை நாம் ஏற்கனெவே சர்ச்சித்த கண்ணகி சம்பந்தப்பட்ட வழிப்புநிலை, ஆன்மிகப்படுத்தப் படுத்தப்படும் ஆசை நிலை ஆகியவற்றுடன் ஒப்பிடுங்கள். புலன்களை ஒடுக்குவதுவேறு அடக்குவது வேறு. வெய்யவன், மதியம், இரவிலும் பகலிலும் ஒளிர்தல், அதாவது துயிலாத விழிப்பு நிலை...

**கா.சு.**: அதே உரையில் சங்கத் தமிழிலக்கியத்தையும் தமிழின் தொன்மையையும 'தேவலை' என்று தட்டிக் கொடுக்கிறார் வெ.சா. இதற்காக நீங்கள் அவருக்கு தேவலை, சீவல், ஏதேனும் தரப்படாதா?

**பிரேமிள்**: புதுமைப்பித்தனுடன் பழகிய கா.நா.சுப்பிரமணியம் குறிப்பிட்ட நிகழ்ச்சி இவ்விடத்தில் எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றது. கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜகன்னாதன் புதுமைப்பித்தனிடம் " நீங்க எழுதின (எதோ ஒரு கதை) படிச்சேன். ரெம்ப நன்னா இருந்தது'' என்றார். அதற்குப் பதிலாக உறுமினார் புதுமைப்பித்தன். " நான் என்ன எழுதினாலும் நன்னாத்தான் இருக்கும். நீ யார் அதைச் சொல்றதுக்கு?'' தமிழ் ஒரு மனிதக் குரல்மூலம் பேசுமானால் வெ.சாவின் 'தேவலைக்'குப் பதிலாக இப்படித்தான் உறுமும்.

**கா.சு:** சாகித்திய அகாதமியின் இந்திய சிந்தனையாளர் வரிசை நூலாக சி.என்.அண்ணாதுரயின் எழுத்துக்கள் வெளிவருவதை அகாதமியின் தமிழத்திணை மெம்பர்களான ***கார்லோஸ் (தமிழவன்), சா.கந்தசாமி, ஜெயகாந்தன்*** மூவரும் ஆட்சேபித்திருக்கிறார்களே. என்ன சொல்கிறீர்கள இதற்கு? சி.என்..அண்ணாதுரைக்குத் தமிழை தெரியாது என்பது இவர்களுடைய ஆட்சேபணைக்கு இவர்கள் தரும் காரணம்.

**பிரேமிள்:** பார்ப்பனீயத்தின் ஏஜண்டுகளாகத்தான் இது இந்த மூவரையம் அப்பலப்படுத்துகிறது. ஜெயகாந்தனின் மேடைப்பேச்சுத் தோரணையில் அண்ணாதுரையின் மேடைப் பேச்சுத்தோரணை இமிட்டேட் பண்ணப்பட்ட காலமும் ஒன்று உண்டு. . சரித்திர அம்சத்தை எடுத்துப் பார்பாப்போம். ஈ.வெ.ரா நடத்திய சுயமரியாதை இயக்கம் பார்ப்பனர்களையும் அவர்களது முத்திரைகளையும் அந்த முத்திரை பொறித் கடவுளரையும் தாக்குவதில்தான் முக்ய கவனம் கொண்டிருந்தது. இது எதிர் மறை, நெகடிவ், அணுகுமுறை. தமிழை அவர் விசேஷித்ததும் இல்லை. அதன் சூட்சுமங்களை உணர்ந்ததும் இல்லை. அண்ணாதுரையின் இயக்கம் ஈ.வெ.ரா.வுடன் இணைந்திருந்த அரசில்வாதியான பாரதிதாசனின் ஆளுமையுடன்தான் இணைக்கப்படலாகும். பார்ப்பனீய

www.padippakam.com
எதிர்ப்பு ஒருபுறம் இருக்க, தமிழ்மொழி என்ற இயலையே தமிழரது சுயமரியாதைக்கான கருவியாக்கிய பாரம்பரியம், சி.சுப்பிரமணியபாரதி, பரிதிமாற்கலைஞன் என்ற சூரியநாராயண சாஸ்திரி மறைமலை என்ற வேதாசலம் ஆகியாரிடத்திலேயே தனது அறிவார்த்த ஆரம்பங்களை வெவ்வேறு அழுத்தங்களுடன் கொண்டிருந்திருக்கின்றது. இவர்களுள் பாரதியின் வழித்தோன்றலே பாரதிதாஸன் என்ற சுப்புரத்தினம்.

*விருந்துபசாரங்களின்போது ஈ.வெ.ராவும் இவரும் தமிழ்மொழிச் சிறப்பு சம்பந்தமாக ஆளையாள் பார்த்து கூச்சல்போடுவது விருந்தச் சிறப்பிக்கும் அம்சம் என்கிறார் தமது இளமையில் தமது தந்தையான சுக்குணி நாடாரினால் திராவிட யஇக்கத்தின்ர் உபசரிக்கப்பட்டதை நினைவுகூரும் மதுரையின் வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் ஐ.ஸி.பாலசுந்தரம். " என்னமோ தமிழ் அமிழ்துங்கிறான். தமிழ காட்டுமிராண்டி பாஷை" என்பார் ஈ.வ.ரா. " நீ சாப்டு, சாப்டு ! கெழம் ! என்னமோ ஒளறுது!" என்பார் பாரதி தாசன். மற்றவர்கள் விழுந்து விழுந்து சிரிப்பார்கள். இதை நாம் மறக்கக்கூடாது. ஹிட்லரிசத்தின் மூர்க்கம், ரத்தவெறி, இனவெறி ஆகியவற்றைப்போன்ன எந்த அம்சமுமம் இல்லாத எளிமையை இந்தச் சித்திரம் காட்டுகிறது. இன்னொரு சித்திரம். இது பாரதிதாஸனிடம் செயலாளராக இருந்த கவின்கலை அச்சகத்தி-ன் நா.ரா நாச்சியப்பன் நினைவு கூர்வது. பாரதிதாஸன் கவிதை சொல்ல, நாச்சிப்பன் எழுதவேண்டும். இன்னும் அவர் எதுவும் சொல்லவில்லை. அதற்குள் நாச்சியப்பன் எதையோ எழுதிவிட்டார். "அது என்ன எழுதியிருக்கே?" என்றார் பாரதிதாஸன். "தமிழ் வாழ்க' ன்னு போடடிருக்கேன்" என்கிறார் நாச்சியப்பன்.*
*" பு...... வாழ்க! அவன் புள்ளையார்சுழி போட்டா இவன் இப்படி ஆரம்பிச்சுட்டான். அடி அதை!" என்றார் பாரதி தாஸன்.* (மற்றவரிகளிடம் கதைக்கக் கூட பிரமிளிடம இருந்து திருடும் விருதுவாங்கிகளுக்கும் காவடி தூக்கிகளுக்கும் இது சமர்ப்பணம். )

இங்கே வெறிகளும் அவற்றை நீட்டி முடிக்கும் குறிகளும் எழவிடாமல் தவிர்க்கப்பட்ட அத்தவாரம் தெரிகிறது. இதுதான் அணணாதுரையின் தொடரந்த இயக்கம். இதற்கு அடுத்தகட்டமாக தமிழ் மொழியைப்பேச்சின் மூலம் கௌரவத்துக்குரியதாக்கியவர் அண்ணாதுரை. அவரது பேச்சில் விஷயாம்சமும் மொழியின் அழகியலும் இணைந்தன. இது அவரை ஒரு கவியாகவே காட்டிற்று. அவரது விஷயாம்சங்களினால் மனக்கஸ்டப்பட்டாலும் அவரது சொல்லாடலில் கட்டுப்பட்டு நின்ற பார்ப்பனர்களும் இருக்கின்றனர். அவரது விஷயாம்சங்கள் சரியானவை என்ற கொள்கைகூட பார்பப்பனர்களுள் முற்போக்கு எண்ணம் கொணடவர்களுள் இருந்திருக்கிறது. இவர்களுள் ஒருவர் *வெ.சா. பின்னாடி, மௌனி, சுந்தர ராமசாமி போன்ரோரால் இவர் பார்ப்பனீய வாதியாகி இருக்கிறார்.*
அண்ணாதுரையின் மேடைப்ப பேச்சுத் தளத்திலேயே தமிழ் ஒரு உச்சாடன கதியை அடைகிறது. இது மொழியின் மீது அவர் கொண்டிருந்த அசாத்யாமமான ஆளுமையின் விளைவு. அண்ணாதுரை ஆரம்பித்து வைத்த இந்த உச்சாடன கதியையே மு.கருணாநிதி தமது பேச்சிலும் சினிமா வசனங்களிலும் தீவிரப்படுத்தினார். தமிழ மொழியின் இயல்பு ஒன்று மே இல்லாத விஷயங்களிலும் ஏதொ பாரதூரமான விஷயம் இருப்பதாகக் காட்டக்கூடிய மேதமையைத் தன்னகத்தே கொண்டிருப்பது என்பதை அண்பாதுரை உணர்ந்தவர். அதை அதிக அளவில் உபயோகித்தவர் மு.கருணாநிதி. அரசியலில் இறங்காமல் நவீன வெளியீட்டியல் நூல்கள் இவர்கள் எழுதியிருந்தால் ஊதிக்காட்டபபடும் இன்றைய சீரிய இலக்கியத்துச் சோளக்கொல்லைப் பொம்மைகள் இவர்கள்முன் பல்லிளித்திருக்கும். அண்ணாதுரைக்குத் தமிழ் வராது என்று சொன்னதுகளுக்கும் இவர்களுக்குப் பின்நின்று ஆடுகிறதுகளுக்கும் உள்பட. இவர்கள் எவ்வளவு பெரிய பூசணிக்காயை ஒருகவளம் சோற்றால் மூடுகிறார்கள் என்று பார்த்தால், இவர்களது நோக்கம் சாகித்ய அகாதமி மூலம் அண்ணாதுரையின் சீர்திருத்தக்


படிப்பகம்

கருத்துக்கள் அகில இந்திய அரசியல் தளத்துக்குப் போய்விடக்கூடாது என்ற அக்கறைதான் புலப்படுகிறது. ராம்மோஹன்ராயும் விவேகாநந்தரும் பாரதியும் ஜே.கிருஸ்ணமூர்தியும் காந்தியும் போன்ரோரின் அதே புரட்சிகர பாரம்பரியம்தான் அண்ணாதுரையுடையது. பாமரரும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க தளத்தில் அவர் தமது கருத்தை மொழியின் ஜால வித்தை மூலம் வெளியிட்டவர். இதனாலேயே அவரது குறைபாடுகள் நிறைபாடுகளாகின்றன. பார்ப்பனீய வர்ணாஸ்ரமதர்ம, ஜாதீய மாமாலங்களை வன்மையாக எதிர்த்த விவேகாநந்தரையும் பாரதியாரையும் தங்களவர்களாக முடக்கிவட்டது. எந்த விவேகாநந்தரை? கேரளத்தின் ஜாதி வெறிகளுக்காக அந்த மாநிலத்தையே "ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரி" என்று சொன் விவேகாநந்தரை. எந்த பரதியை? "அல்லா , அல்லா, அல்லா பல்லாயிரம் கோடி கோடி அண்டங்கள் நில்லாது சுழண்டோட நியமம் செய்தருள் நாயகன்- சொல்லும்லாலும் மனத்தாலும் தொடரொணாத பெருஞ்சோதி" என்று தனது பூர்ணமான கவித்வ வீர்யத்தை ஹிந்து வெறியர்கள் முக்கியமாகத் தாக்கும் இஸ்லாமியரின் அல்லாமீது அர்ச்சித்த பாரதியை! ஆனால் எப்படி இவர்களால் காந்தியை தங்கள் இயக்கத்துக்குள் அடக்க முடியவிலைலையோ, அப்படியே அண்ணாதரையையும் மடக்க முடியவில்லை. இதுதான் உண்மையான சங்கதி. அதாவது மதச்சார்பற்ற குடிமையுறவை மிகத் தெளிவாக வெளியிட்டவர்கள் காந்தியும் அண்ணாதுரையும். விவேகாநந்தரிடமும் பாரதியிடமும் தங்கள் வெறிகளுக்குச் சாதகமாகப் பொறுக்கக்கூடிய எதுவும் , ஹிந்து வெறியர்களுக்கு இவர்களிடம் கிடைக்காது. காந்தியை ஓரங்கட்ட முடியாது ஆனால் அண்ணாதுரையை ஓரங்கட்டிப் பார்ப்போம் என்ற நோக்கம் இது.

**கா.சு:**: இன்றைய இந்தியாவின் ஹிந்துத்துவ மீட்சியைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

**பிரேமிள்**: இது சுமார் பத்து வருடங்களுக்கு முன்பே தனது தலையைக்காட்ட ஆரம்பித்துவிட்டது. அந்தச் சந்தர்ப்பத்திலேயே ஒரு அமெரிக்கச் சொற்பொழிவில் ''IN India Hindu revivalism is raising its ugly head again'' என்று எச்சரித்திருக்கிறர். ஜே.கிருஸ்ணமூர்த்தி. இவரும் இந்த ரிவைவலிஸ்டுகளால் முடக்கப்பட முடியாத தெளிவை வெளியிட்டவர். ஒருவித்தில் பார்த்தால் ஹிந்துத்துவத்துக்கு நேற்றவரை உயிர் தந்து கொண்டிருந்த ஞானார்த்த மரபை இந்த வெறி இயக்கம் அந்நியப்படுத்துவது எனக்குத் தெரிகிகன்றது. நேற்றுவரை ஹிந்துத்துவ பாமரத்தளத்தினர்மீது கொண்டிருந்த கருணையினால் மட்டும் ஹிந்துதுவத்தின் கசமுசா கட்டுமானத்துக்கு உயிராதரவு தந்துகொண்டிருந்தது இந்தியாவின் ஞான மரபு.... இதன் ஊற்று சரித்திர நோக்குகளுக்கு எட்டாதது. இதை எந்த ஒரு மரபும் உரிமைபராட்ட முடியாது.

---- ----

**கா.சு:** பார்ப்பனீயமும் ஹிந்து ரிவைவலிஸமும் ஒன்றா? பார்பபனீயம் என்பது இந்தியாவின் பிராமண ஜாதியினருடையதும் அவர்களுடைய ஏஜண்டுகளான வேறு ஜாதியினருடையதும் இயக்கம் என்ற பொருள் உங்கள் பார்வையில் தெரிகின்றது. இவர்களே இப்போது ஹிந்து ரிவைவலிஸம் பேசுகிறார்கள் என்கிறீரிகளா?

**பிரேமிள்**: நிச்சயமாக,

--- ----

**கா.சு:** இவர்களை எதிர்ப்பவர்களை ஞானார்த்த மரபை அநுசரிக்கிறவர்கள் என்கிறீர்களா?

www.padippakam.com

**பிரேமிள்**: ஞானார்த்தி எதையும் எதிரப்பவனல்லன். அவனது பார்வையை உணர்ந்து கொள்கிறவன். நிலமையை அறிவு பூர்வமாகச்சுட்டிக்காட்டி ஜனங்களிடம் ஒரு விழிப்பு நிலையை ஏற்படுத்தக் கடமை கொண்டவன். ...

**கா.சு:** ஞானார்த்தம் என்பதில் ஹிந்துத் தொனி இருக்கிறதே?

**பிரேமிள்**: பழந் தமிழில் அறிவன் என்ற பதம் உபயோகமாகி இருக்கிறது. அறிவு நிலை மதமுத்திரை அற்ற நிலை. சமஸ்கிருத்தில் இது ஞானம் என்று புழங்கும்போதே அது ஹிந்துத்தவம் சார்ந்ததாக ஆக்கப்பட்டிருக்கிறது. இதனால்தான் புத்தர்பிரானின் செய்தியில் 'போதம்' அல்லது 'புத்தநிலை' என அறிவு நிலை குறிப்பிடப்படுகின்றது.

**காசு.:** தமிழகத்தில் திராவிட இயக்கம் பார்ப்பனீய இந்துத்துவத்தை மட்டுமதானே தாக்குகிறது?

**பிரேமிள்**: அண்ணாதுரை இந்துத்துவ பார்ப்பனியத்தைத் தாக்குவதற்கு முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டது கிறித்துவ பார்ப்பனியத்தின் பரமவைரியான அமெரிக்கச் சிந்தனையாளர் இங்கர்சாலின் கருத்துக்களைத்தான். விஞ்ஞான இயக்கத்தை எதிர்த்த பைபளின் மனோபாவங்களை வெகுஜனத்த தளத்ததில் வெகு தீவரமாக எதிர்த்தவர் இங்கர்சால். எனவே இந்துத்துவப் பார்ப்பனீயத்தை மட்டும் எதிர்ப்பது என்பது அந்த இயக்கத்துனுள் வேறு மதங்களின் பார்ப்பனீயம் இயங்க இடம் விடுவது ஆகிவிடக்கூடது. செய்தால் அந்த இயக்கமே சுயப்பிரக்ஞை அற்றதாகிவிடுகிறது. புதிய பார்ப்பனீயமாகிறது. திராவிட இயக்கம் ஈ.வெ.ராவின் காலத்திலேயே பகுத்தறிவு இயக்கம் தான். ஆனால் அரசியல் தளத்தில் இது கம்யூனிசத்தின் சாயலையே கொண்டிருக்கின்றது. உழைப்பவனையும் சுரண்டுகிற வனையும் இனம்காட்டுகிற வர்க்கப்பபோராட்ட சித்தாந்தம் கம்யூனிஸம். இதை இந்திய தமிழகப் பின்னணிக்குக் கொண்டுவரும்போது வர்க்கப் போராட்டத்துக்குப் பதிலாக ஜாதீயப் போராட்டத்தை திராவிட இயக்கம் இனம்காட்டிற்று. இதை அறிவார்த்தமாக உணர்ந்து கொள்கை வடிவாக்கிய மேதமை சி.என்.அண்ணாதுரையினுடையது. பார்ப்பனீயத்தின் மேலாதிக்கமே முதலாளீயமாக அண்ணாதுரையின் பார்வையில் காட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பார்வையைத் தமிழகத்துக் கம்யூனிச இயக்கம் உணரவில்லை. ஆனால் மாரக்கசிய அறிஞரான எம்.என்.ராய், தமது செயலாளராக இருந்த எம்.கோவிந்தனிடம் ' ***அண்ணாதுரையின் ஆரம்பக் கட்டங்களிலேயே "இவரைக் கவனியுங்கள் சமூக இயக்கத்தில் பிரதேச விஷேசத்தை உணர்ந்தவர் அவர்"*** என்று கூறியதைக் கோவிந்தன் என்னிடம் நினைவுகூர்ந்துள்ளார்.

---------- ------------ ---------

**கா.சு:**, செக்ஸ் என்பது உணவு போன்ற ஒன்று என்றால் கற்புக்கு இடம் என்ன?

**பிரமினள்:** மனப்பீடிப்பாக செக்ஸ் இல்லாதவர்களுக்குத்தான் அது உணவு போன்றது. உணவுக்குப் பசி அவசியம். செக்ஸிற்கு அன்பு அவசியம். அன்பினால் நிர்வகிக்கப்படும் செக்ஸ் ஒழுக்கமே கற்பு.



படிப்பகம்

www.padippakam.com

## பாரீஸில் அங்கே

பிரான்ஸிலிருந்து வந்தது அழைப்பு
ஆந்தைக்கு
அவர் அல்ல இவர்தான்
ஒரிஜினல் ஆந்தை என்று
நடுப்புறம் நின்ற
கலாச்சாரத் தரகர்கள்
அனுப்பினார்கள் இவரை
பாரீஸில் அங்கே
ஒருபுறம் சிலர்
கஸரத்து எடுக்கக் கண்டார்
" இது எதற்கு?
கலாச்சாரமாக
மொஸரத்துக் கேட்கலாமே"
என்றார் இவர்.
வந்தது பதில் தமிழில்
" மஸிராச்சு போடா" என்று
இலங்கைத் தமிழ் அகதிகள் போல்
இருக்கெதென்று
அவர்களை விட்டு
மறுபுறம் பார்த்தார்
அங்கே சிலர்
விஸ்கி குடிக்கக் கண்டார்
"இது எதற்கு?
இலக்கியமாக டாஸ்டா
யவ்ஸ்கி படிக்கலாமே"
என்றார் இவர்.
வந்தது பதில் ரஸ்ய மொழியில்
"லுஸ்யோ வஸ்கி" என்று
லுஸ்யோ வஸ்கி என்றால்
" மண்ணாந்தை" என்று பொருள்.

தயவு செய்து யாரும் 'கனடா' என்று மாற்றிப் போட்டு வாசிக் வேண்டாம். இது உண்மையிலேயே சிலகாலத்துக்கு முன் பிரமிள் எழுதிய கவிதை.

**தமிழில் புதுக்கவிதை வழக்காறு தோன்றி இது நாள்வரை எழுதப்பட்டதுகளில் சிறந்ததுகளாக ஒவ்வொரு கவிஞரிடம் இருந்தும் ஒரு பத்துக் கவிதைகள் வீதம் பொறுக்கி, அதுகளை எல்லாம் ஒரு கூடையிலிட்டுக் குலுக்கி, மீண்டும் பிரித்துக் காட்டச் சொன்னால், பிரமிளோட கவிதை களைத்தவிர, பிறரோட கவிதைகளை அடையாளம் காணுகிற அலுவலில் ஒரு தேர்ந்த வாசகன் கூடத் திண்டாடிப் போவான்.**

**நகுலனைப் போல் பிச்சமூர்த்தியைப்போல் எழுதுகிறதுக்கு ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் பிரமிளைப்போல எழுதித்தேற ஒருவரும் ஏலவில்லை.**

உரிய சிம்மாசனம்-ராஜசுந்தரராஜன்

www.padippakam.com

## Faith

We all know that every faith has its own military, even the faiths that proclaim themselves to be compassionate.

While such proclamation retard into symbols, rituals and mere words, faiths, whether they may be religious, non-religious or anti-religious have shown great enthusiasm for war. Since this being the case, why does man bind himself to faiths?

Perhaps he starts with the notion of security, in this life or in the afterlife. Still he wages wars to protect his faith, rushing headlong into the ultimate insecurity of battle.

To kill and die for one's faith has been, it seems, highly commendable for the lot man, whether he believes in a reward in the afterlife or in a better world for his progeny and party.

Ofcourse there are instances where one protects life and in the act kills or dies. Such instances have given birth to the romantic imagery of heroism. Perhaps it is the urge to protect life that has itself deluded into protecting a faith, an idea, make a man believe that a faith is a living thing and he is ready to kill or die for it - to deal death for it.

Our issue is to examine the urge to protect life and the urge to deal death. How do they happen to be a single act?

It may be that man lives not by security alone. It matters more to him why he should live



படிப்பகம்

at all. For, innately, he is empty. Perhaps this emptiness seeks its own fulfilment. And he adopts a faith. A faith gives man a particular state of being. To be is to be something, somebody, significant. In the fullness of this significance, security retards, whether it be his security or that of others. This significance, made so sacred as to deal death, is founded upon total insignificance - emptiness. Is this not so?

Pramil

## Lineage

For all his flamboyance
the fire-god begets
ashes.

## The Door

The Moth knocks open
The Flame
Into the abyss.

## Paradox

The Waves whisper
To the deaf sand line.
The eye travels with the wind
only to be blinded by
The wind-borne dust.
Within the eye of fire
The ash is a closed eyelid.

## பல்லி

கவிதை..
இறக்கத் துடிக்கும் வாலா?
உயிரோடு மீண்ட உடலா?

## நடுநிசிக் குரைப்பு

உன்பெயர் நடுவில்
ஒரு 'வ'
என்பெயர் முடிவில்
ஒரு 'ள்'
உன்னை நான் பகலின்
பகிரங்கத்தில
நிறுத்திக் குரைத்தால்
உன்பதில் நடுநிசி
ரகசியக் குழுக்களில்
பதுங்கிய 'வள்'

www.padippakam.com

பிரமிள் எழுதிய தமிழீழத் தேசிய கீதம். இதை அவர் முதலில் வெளியிட்டபோது அதற்குக் காப்புரிமையும் போட்டிருந்தார். பிரமிளின் அவ்வப் போதான பல கலங்களில் இதுவும் ஒன்று.

தமிழீழம்

கடலலை அதிர்வினில்
விடுதலை உறும
தமிழீழத்தாய் எழுக
அன்னை
உருவொடு உயிரும்
அருளொடு வீரம்
செல்வமுமாக வெல்க.

(வேறு)

வன்னியாழ் கோணைபுத்
தளம்மட்டு நகரொடு
மன்னார் அம்பாறையும் நிமிர
அதிரும்
முத்திசைக் கடல்நடு
நெற்றியாய் ஒளிர்வது
கற்றவர் நிறையுமிந் நாடு.

வர்க்கவர் ணங்களை
சிந்தைசெய் திறனால்
வென்றது நம் தமிழீழம்,
கண்கள்
எத்திசை நோக்கினும்
எம்மவர் மானுடம்
முற்றிலும் ஓர்குலமாகும்.

# பிரமிளிலிருந்து இடைவெளி

வெளிநாடு வந்திருந்த ஞானக்கூத்தனிடம் பேசிக் கொண்டிருந்தபோது, பிரமிளைப் பற்றிப் பேச்செடுக்கும் தருணங்களிலெல்லாம் மிகுந்த கொதிப்படைந்து கொண்டிருந்தார். குடும்ப வாழ்வை அறியாதவன், தாயைக் கவனிக்காதவன். ஒரு கிறுக்கன் என்பதாகச் சொல்லிக் கொண்டிருந்த கூத்தன் ஒரு இடத்தில் அவன் என்ன எழுதினாலும் நான் வாசிப்பதில்லை. ஆனால் என்னுடைய கவிதைகளின் முதல் வாசகன் அவனாகத்தான் இருந்தான் என்பதாகச் சொன்னார். இதைத்தான் ஒதுக்குவதும் ஒதுங்குவதும் பார்ப்பானின் புத்தி என்று நாங்கள் இப்போதும் சொல்லி வருகிறோம். (அதேவேளை பிரமிள் ஒரு நல்ல விமர்சகன் என்பதற்கான சான்றும் அதுவே. பிரமிளின் வெற்றி அனைத்தையும் வாசிப்பதிலும் அதைப்பற்றி தன் கருத்தை வெளிப்படையாகச் சொல்வதிலும்தான் இருந்தது.) பிரேமிள் வாழ்ந்த காலத்தில் கள்ள மௌனம் காத்த ( "நான் இப்போது எழுதுவதில்லை" என்பன போன்று) இலக்கியவாதிகள் இப்போது புத்துயிர் பெற்று புதுப் பொலிவுடன் பவனி வருகிறார்கள். சு.ரா தொடக்கம் ஞானக்கூத்தன், வெங்கட் சாமிநாதன் என்று அத்தனை பார்ப்பனீய இலக்கியச் சிந்தனையுள்ளவர்களுக்கு ஆப்பு வைத்தவர் பிரேமிள். இப்போது அவர் இல்லாத இடைவெளி எல்லோருக்கும் நல்லதொரு வாய்ப்பாகப் போய்விட்டது. பிரேமிளைப் பற்றிப் பேசாமல் விடுவதனூடு தம்மைக் காப்பாற்றிக் கொள்கிறார்கள். இது தெரியாத புலம் பெயர் ஈழத்து இலக்கியவாதிகளும் அவர்களுடன் சேர்ந்து அன்ன நடை போடத் தொடங்கியுள்ளார்கள். இவர்கள் பிரேமிளைப் பற்றிப் பேசுவதென்றால்,

"சிறகிலிருந்து
பிரிந்த இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
அதன் வாழ்வை எழுதிச் செல்கிறது"

என்பன போன்ற படிமக்கவிதைகளை மட்டும் காட்டித் தப்பித்துக் கொள்வார்கள். அரசு விமர்சனக் கவிதைகள் பற்றி வாய் திறக்கமாட்டார்கள். திறந்தால் தமது பிழைப்பு நாறும் என்று நன்குணர்ந்தவர்கள் அவர்கள்.

இன்று பிரமிளின் போக்குக்கான ஒரு இடைவெளி ஒன்று இருக்கிறது இந்த இடைவெளி நிரப்பப்படவேண்டும். இல்லையேல் அ.முத்துலிங்கம் போன்றவர்கள்தான் மகோன்னதப் படைப்பாளிகளாக தமிழ் உலகில் கொடிகட்டிப் பறந்து திரிவார்கள். பிரமிளை நாம் தொடர்ந்து முன்நிறுத்துவதும் பிரேமிள் பற்றிப் பேசுவதுமே இன்று நமக்கு முன்னுள்ள பல முக்கியமான வேலைகளில் ஒன்று.

கற்சுறா



படிப்பகம்

www.padippakam.com

பிரமிள் எழுதியவை நல்ல கவிதைகள் என்பது சரிதான். பல அவருடைய சில பரிசோதனைகள், கேலிகள் என்ற வகையிலும் மேலும் பல குறிப்பாக விமர்சனக் கவிதைகள் என்ற வகையிலும் அடங்கும். பிரமிளைப் புறக்கணிக்க அல்லது கனவிலாவது வெளி நாட்டிலாவது மறந்துவிட நினைப்பவர்களைக்கூட ஆவியாகத் துரத்துவன அவரது விமர்சனக் கவிதைகள்தான்.

அவர் எழுதிய உரைநடை விமர்சனங்களைவிட அவரது கவிதை விமர்சனங்கள் செறிவானவை, திறன்வாய்த்தவை, கூர்மையானவை, ஆணித்தரமானவை. இந்தக்கவிதை அவருடைய ஒருபரிசோதனை முயற்சி. பைலா என்று அவர் எழுதியுள்ள ஒரு பாடல்.



## பைலா

சிந்தாமணி லேடி ஹாய் சிகரெட் ஒண்ணு தாடி
நீயும் நானும் சேரந்து ஒரு தம்மடிப்பம் வாடி

டிங்கிரி டிங்காலே மீனாட்சி சங்கதி என்னாடி
எங்கவீட்டு ஆட்டைப்புடிச்சி முழுங்குது உன்கோழி

பப்பள பளபள ப்பாளித் தோட்டம்
படுத்தபாயைச் சுரட்டிக்கிட்டு எடுத்தானாம் ஓட்டம்

மதுகைக்கார நய்னா வீட்டில் சூட்டமென்னடி?
அந்தக்குதிரைக்காரப் பயலக்கண்டா ஓட்டமென்னடி

சிந்தாமணி லேடி உன்புருசன் எனக்கு ஜோடி
அந்த ஆளு மூஞ்சியிலே என்னா அது தாடி?
எதித்தவீட்டு ஆம்புளைக் கு எனக்குமேல ஆசே
எம்புருசன் பொலிஸ்காரன் ஆட்டுக்கடா மீசே

சிவாகாமி ஒடம்பெல்லாம் எவனோட வாசம்
அவளோட புருசன் வந்து மோந்து பாத்தா மோசம்

டிங்கிரி டிங்காலே மீனாச்சி பாய்விரிச்சாளாம்
பங்கஜம் பாட்டி பக்கத்துலே படுத்திக்கிட்டாளாம்.

இன்றைக்குத் திரைப்படத்தில் வரும் கானாப் பாடல்போல -சென்னைப் பாசையில்- வரிகள் இருந்தாலும் இலங்கையின் பைலாப்பாடலை நினைவூட்டும் தளக்கட்டு உண்டு.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

**உள்ளே:**

பிரமிள்
தருமு சிவராம்
அவ்ரு.ஃப் தர்மோத்-
ஜீவராம்
அஜித் ராம் பிரேமிள்
மற்றும்
**அவரின் ஆவி**

# எங்கிட்டு வெங்கிட்டு?

எங்கிட்டுப் பாக்கிறே
வெங்கிட்டு விமர்சகா?
என்னைப்பார் என்
கவிதையைப் பார் என்றேன்
குனிந்து நின்றுன்
செருப்பைப் தேய்த்தாய்
எங்குட்டுப் பார்க்குறே
வெங்குட்டு விமர்சகா?
என்னைப்பார் என்
கதைகளைப்பார் என்றேன்
திரும்பி நின்று தலை
மயிரைச் சிலுப்பினாய்
என்னைப்பார் என்னைப்பார் என்று
உன்னைக் கேட்பது

மடத்தனம் என்று
என்னைப் பார்க்கிறேன்
கால் நிற்கிறது
எல்லையற்ற ராத்திரியில்
தலைக்குள் தகிக்கிறது
ஓயாத பெரும் பகல்
இப்போது
என்னைப்பார் என்றேன்
பேச்சு எழுந்தால்
புயல் மூச்சு
அதில் அடிபட்டு
அட்ரஸ் இல்லாமல்
பறக்கின்றன உன்
செருப்பும் மயிரும்


**Arituyil**

(The Journal of literature of Tamil Community in Toronto)
P.O.Box 73036
2300 Lawrence Ave. East
Scarborough, On
CANADA
M1P 2R2
e-mail: arituyil@hotmail.com

Arituyil : ***The*** Journal of literature of Tamil Community in Toronto
ISSN: 1710-6133

ஆசிரியர்: *நந்தகுமார் திருநாவுக்கரசு*

துணை ஆசிரியர்: *இளந்துறைவன் (ஒருங்கிணைப்பு)*
*பிரியங்கன்*
*மஞ்சலுணா கோமதி*
*வளவன் (தொடர்பாளர்)*


புதிய நண்பர்களை எங்களுக்கு எழுதும்படி கேட்கின்றோம். கதைகள் கட்டுரைகள், கவிதைகள், இலக்கியம் தொடர்பான தகவல்கள் எனப் பலவற்றையும் எழுதித்தாருங்கள். வெளியிடுவதற்கு நாங்கள் தயாராய் இருக்கின்றோம். புதிய நண்பர்களின் வரவு எங்களை மழைபார்த்த வயல்போல் உற்சாகப் படுத்தும். வரவேற்கிறோம். எதிர்பார்க்கிறோம். நன்றி. !


இந்த இதழ் வெளிவரக் காரணமான உள்ளங்களுக்கு நன்றி !

அட்டை எழுத்து : சிந்தியா - **Cynthia**


படிப்பகம்